JANAVINODINI.

ஜநவிநோதினி.

இல. 5.] மேமீ 1882. [புஸ்த. XIII.

CONTENTS.

Mountain Railways 93
A Lecture on Water and its effects on Public Health, by Dr. M. C. Furnell 95
The Dangerous Island—An Italian Story 102
Advice to Students 108
The Royal Shipwright........ 110
The Child's Corner 114
News 118

அட்டவணை.

மலையிருப்புப்பாதைகள் 93
ஜலத்தினால் உண்டாகும் சௌக்கியத்தைப்பற்றிய உபந்நியாசம் ... 95
அபாயத்துக்கிடமான ஒரு தீவு 102
வித்தியார்த்திகளை நோக்கிச் சொன்ன நற்புத்தி 108
சப்பல்தச்சனான கோமகன் 110
சிறுவர்க்கான கதை................ 114
சமாசாரம் 118

MADRAS:

Published by the

MADRAS SCHOOL BOOK AND VERNACULAR LITERATURE SOCIETY,

AND SOLD AT THEIR DEPOSITORY, OLD COLLEGE.

TO OUR READERS.

In commencing a new volume of *Janavinodini*, we bid all a hearty welcome to its pages, and wish to remind them that, while the seasons pass quickly by, here we are still at our post, unchanged at least in one thing—our desire to please and interest our readers as far as we can; and the knowledge that our readers think kindly of us and of our work performed under difficulties will give us fresh energy for the coming year. Every month we shall put in something in the pages of *Janavinodini* adapted for nearly all ages, as well as interesting stories fitted for home use.

This Magazine requires now as much support as it is possible to secure, and this may be given in three ways; (1) By annual subscriptions *paid in advance*, and special donations for providing suitable pictures to charm the young more than ever; (2) By making the Magazine more widely known with a view to give it a larger circulation both in Town and Country; and (3) By literary contributions suited to the pages of the Magazine.

We take this opportunity to thank the able writers who during the past year kindly contributed some useful papers to *Janavinodini*, and hope that we shall continue to receive more of such co-operation in the year which has begun.

MOUNTAIN RAILWAY.—மலையிருப்புப்பாதை.



JANAVINODINI.

ஜநவிநோதிநி.

இல. 3, 4.] {மார்ச்சுமீ ஏப்பிரல்மீ} 1882. புஸ்த. XIII.

CONTENTS. | அட்டவணை.

Christopher Columbus	51	க்ரிஸ்தபர் கொலம்பஸ்	51
A Pinch of Salt	56	ஒரு கட்டி உப்பு	56
A Blacksmith and a Tailor	64	ஒரு தச்சனும் தையற்காரனும்	64
The Welcome Spring	72	வஸந்தருதுவின் நல்வரவு..........	72
The Earth's Treeless Regions...	75	பூமியிலுள்ள மரமில்லா வெளிகள்...	75
On Good Company	81	நல்லோரிணக்கம்	81
The Child's Corner	84	சிறுவர்க்கான கதை	84
News	92	சமாசாரம்	92

MADRAS:

Published by the

MADRAS SCHOOL BOOK AND VERNACULAR LITERATURE SOCIETY,

AND SOLD AT THEIR DEPOSITORY, OLD COLLEGE.

ஞல் உண்டாகும் ஓசையும் புகைகிளம்பும் வேகமும் அதிகமாயிருப்பதால், அவ்வண்டியின்மேல் ஏறிப்போகிறவன் கண்ணை மூடிக்கொண்டு யோசித்தால், மணிக்கு 60 மைல் வீதம் ஓடுகிற வண்டியின் வேகம்போலத் தோன்றும். அம்மலைமேல் ஏறுவதைப்பார்க்கிலும் வண்டி இறங்குவது அதிக அபாயகரமாகக் காணப்படும். அந்த வண்டிகளின்கீழ்க் கடிகாரசக்கரம்போன்ற பல பல்சக்கரங்கள் அமைத்து, வண்டிகள் சறுக்கி விழ்ந்துபோகாதபடி காக்கப்பட்டிருக்கின்றன. வண்டியின்மேல் பிரயாணிகள் உட்காருவதற்கு ஆசனங்களும் அவர்கள் சாய்ந்துபோகாதபடி பக்குவமாய் அமைக்கப்பட்டிருக்கின்றன.

இவ்விதமான மலையிருப்புப்பாதைகள் இன்னும் பலவற்றை ஐரோப்பாவில் ஏற்படுத்தும்படி நிச்சயித்திருக்கிறார்கள். சிலநாளைக்குமுன்னே விசூவியஸ் என்னும் மலைச்சாரலுக்கு இதேவிதமான இருப்புப்பாதையொன்று நிருமிக்கலாயிற்று. ரீகி மலைக்கு இருப்புப்பாதை போட்ட பதினொரு வருஷகாலமாய்த் தட்டுத் தடையின்றிப் போக்குவரவுகள் விசேஷமாக நடந்துகொண்டுவருவதைப் பார்க்கையில், இவ்விதமாக மலைப்பிராந்தங்களுக்கு இருப்புப்பாதை போடுவதனால் எவ்விதமான அபாயமும் இல்லாமலிருப்பதோடு கூடப் பிரஜைகளுக்கு மிகுதியாக நன்மையும் விளையுமெனத் தெளிவாகின்றது. ஜனங்கள் விசேஷமாகப் போக்குவரவு செய்கிற பருவதங்களுக்கு நமது தேசத்திலும் இவ்விதமான இருப்புப்பாதைகள் ஏற்படுத்தினால் விசேஷ நன்மையுண்டென்று யோசித்துச் சிலர் ஒரு சங்கமாகக் கூடி, இத்தென்னிந்தியாவில் குளிர்ச்சிக்கு முக்கியாதாரமாய்ச் சவுக்கியமான இடமென்று ஐரோப்பியர் மிகவும் கொண்டாடிக் கோடைகாலத்தில் கூடி வஸிக்கும் ஸ்தானமான நீலகிரிக்கு அதன் அடிவாரத்திலிருந்து ஒரு இருப்புப்பாதை அமைக்கும்படி நிச்சயித்து, அதற்காகத் துரைத்தனத்தாரை அனுமதிகேட்க, அவர்களும் அப்படியே செய்யும்படி அங்கீகரித்ததாகத் தெரியவருகின்றது. அம்மலைமேல் இருப்புப்பாதை போடுவதற்குத் தக்க மார்க்கமும் அளந்துபார்த்து நிர்ணயித்திருக்கிறார்களாதலால், ஸ்விட்ஜர்லாந்தில் இப்போது வழங்கிவருகிற மலையிருப்புப்பாதையைப் போலச் சீக்கிரமே இத்தேசத்திலும் ஒன்று ஏற்பட்டு நாம் காணும்படியாகும். ரீகி மலைக்கு இருப்புப்பாதை அமைத்தது ஜனங்கள் ஏறியிறங்குவதற்குமாத்திரமே உபயோகப்பட்டுவருகின்றது; நமது நீலகிரிக்கு ஒன்று ஏற்படுமானால் அது பிரயாணிகளுக்குமாத்திரமேயன்றி, காப்பி, தேயிலை முதலிய அவ்விடத்து விளைபொருள்களைக் கீழே கொண்டுவரவும், மலைமேல் வசிப்பவர்களுக்கு அவசியமான சாமக்கிரிகளைக் கீழிருந்து கொண்டுபோகவும் மிக்க உபயோகமாகும். இந்த நீலகிரிக்குமாத்திரமேயன்றி ஜனங்கள் விசேஷமாய்ப் போக்குவரவுசெய்கின்ற இன்னும் மற்ற மலைகளுக்கும்

இவ்விதமான இருப்புப்பாதைகளை ஏற்படுத்தலாம். ஆயின் செலவுக்குத்தக்க வரும்படி வருவதற்கு ஏதுவில்லாத இடங்களுக்கு இருப்புப்பாதை அமைப்பதினுல் உபயோகம் ஒன்றுமில்லை. இவற்றை யோசிக்கையில், சீக்கிரமே இமயமலையிலுள்ள கங்காநதியின் உற்பத்திஸ்தானத்துக்கும், பருவதப்பிராந்தங்களிலுள்ள இன்னும் இதரமான ஸிம்லாமுதலிய சவுக்கியமான இடங்களுக்கும் பிரஜைகள் மலையிருப்புப்பாதை வண்டியிலேறிப் போகிருர்களென்று நாம் கேட்கும்படியான காலமும் வருமெனத் தோன்றுகின்றது.

ஜலத்தின் உபயோகத்தைப்பற்றிய உபந்நியாசம்.

தண்ணீரின் குணத்தைப்பற்றியும், அதனுல் பிரஜைகளுக்கு உண்டாகும் தேகசவுக்கியத்தைப்பற்றியும் டாக்ட்டர் வர்னல்துரை சென்ற ஏப்பிரல்மீ 1உ ஒரு பிரசங்கம் செய்தார். அதை இதனடியில் மொழிபெயர்த்தெழுதுகிருேம்.

மனிதன் இப்பூமியில் பிழைத்திருப்பதற்கு முக்கியாதாரமான பொருள்கள் பிருதிவி, அப்பு, தேயு, வாயு என்கிற நான்கு பூதங்களாம். சாதாரண வாயு இல்லாமல் மன்னுயிர் நெடுநேரம் ஜீவித்திருக்கமாட்டாது. ஒருவன் எவ்வளவு பலசாலியாயிருந்தாலும் சாதாரணவாயு இல்லாவிட்டால் இரண்டு நிமிஷத்துக்குள் இறந்துபோவான். ஆனுல், ஐரோப்பாகண்டத்துத் தேசங்களிற்போல இத்தேசத்தில் நமக்குக் கெட்டகாற்றினுல் அவ்வளவு கெடுதி உண்டாவதில்லை; இது உஷ்ணதேசமானதுபற்றித் தாபம் பொறுக்கமாட்டாமல் நாம் எப்போதும் ஜன்னல்களையும் கதவுகளையும் திறந்தே வைத்திருக்கிருேமாதலால், அதன் வழியாக வருகிற நல்லகாற்றை நாம் சுகமாய் அனுபவிக்கிருேம். இதனுல் உண்டாகும் நன்மை மட்டுமிதமானதன்று.

பிருதிவி என்னப்பட்ட பூமி எல்லாவற்றிற்கும் ஆதாரமாகையால் அது இல்லாமற்போனுலும் பிழைத்திருப்பது அசாத்தியமே. தேயுவும் அப்படிப்பட்டதுதான். ஆயின் அதைக் கெட்ட யஜமானனென்றும், நல்லவேலைக்காரனென்றும் சொல்வார்கள். அதாவது, நெருப்பு நமக்கு அடங்கி ஆட்பட்டிருக்கிறவனாயில் அதனுல் நமக்கு நன்மையும், நம்மை மிஞ்சிப்போனுல் அப்போது அதனுல் பெருந்தீமையும் விளையுமென்பதாம். பிருதிவி, வாயு இவ்விரண்டுக்குப்பின் ஜலமே மன்னுயிர் வாழ்க்கைக்கு முக்கியாதாரமாயிருப்பதால் அதைப்பற்றியே இங்கு விசேஷமாய் எடுத்தெழுதுவோம்.

சாதாரணமாய்ப் பார்ப்பவர்களுக்குத் தண்ணீர் பிரிக்கக்கூடாத ஒரேபொருளாய்த் தோன்றுமாயினும், வாஸ்தவத்தில் அது பிராண

வாயு, ஜலவாயு என்னும் இரண்டு வாயுக்கள் சேர்ந்து உண்டான தென்று உங்களுக்குச் சந்தேகமறத் தெரிந்திருக்கிறதல்லவா? சுலபமான ஒரு பரிசோதனையினால் தண்ணீரை இவ்விரண்டு வாயுக்களாகப் பிரித்தும், மறுபடி இந்த வாயுக்களைத் தண்ணீராக்கியும் இவ்விஷயத்தைத் தெளிவாய்த் தெரிந்துகொள்ளலாம். ஆயினும் நான் இப்போது துவக்கிய காரியம் வேறுகையால், இந்தச் சொற்பகாலத்தில் ஜலத்தின் சொரூபத்தைப்பற்றிப் பேசிப் பொழுதுபோக்க நான் விரும்பவில்லை; தண்ணீர் சுகத்துக்கு ஆதாரமாகின்ற அம்சங்களைப் பற்றியே பேச விரும்புகிறேன்.

குடித்தோகையும் கொள்ளைநோய்களும்.

மிகப் பெரிய தேசமான இவ்விந்தியாவில் அடிக்கடி மிகக் கொடியவைகளான விஷபேதி, விஷச்சுரம், வைசூரிமுதலிய தொத்துநோய்கள் உண்டாகின்றன. இவற்றுள் சுரத்தினாலேயே மரணம் விசேஷமாக நேரிடுகின்றது. சென்ற 1879-ஷு இவ்விந்துதேசம் முழுதிலும் மரணமடைந்தவர்களுடைய மொத்தம் தொகை 50,00,000. இதில் சுரத்தால் மரணமடைந்தவர்கள் மாத்திரம் 35,00,000 பேர். விஷபேதியால் இறந்தவர்கள் 2,65,000 பேர். சில வருஷங்களில் இன்னும் கேடாயிருந்ததுமுண்டு. இச்சென்னை ராஜதானியிலேமாத்திரம் அதேவருஷத்தில் 5 லக்ஷத்துக்கு அதிகமான பிரஜைகள் இறந்துபோனார்கள். அவர்களுள் விஷச்சுரத்தால் இறந்தவர்கள் 2,85,500 பிரஜைகள். விஷபேதியால் இறந்தவர்கள் 13,300 பேர். யோசித்துப் பார்க்கையில் இம்மரணங்கள் வெகுவாய்த் தண்ணீரின் அசுத்தத்தினாலேயே உண்டானவையென்று தோன்றுகின்றன. அதைக் கொஞ்சம் கவனித்தால் இம்மரணங்களை அநேகமாக விலக்கலாம்.

துரைத்தனமும் சுகாதார பரிபாலனமும்.

இத்தேசத்து துரைத்தனத்தார் தாங்களே சிலகாலமாய்ப் பிரஜைகளுக்குப் பரிசுத்தமாயிருப்பதனால் உண்டாகும் ஆரோக்கியத்தை முக்கியமாகக் கருதி அதைப் பரிபாலித்து வருகையில், தேச சுகாதாரங்களைப் போய்ப் பார்வையிட்டு விசாரிக்கும்படியான உத்தியோகம் (Sanitary Commissioner) எனக்கே நியமிக்கப்பட்டது. அதற்காக நான் செய்யவேண்டிய வியாபாரங்களுள் ஒன்று, நான் அவ்வவ்விடங்களுக்குப் போய் அங்கங்குள்ள நிலைமைகளைப் பார்த்து, சுகாதார விஷயங்களில் நான் கண்டறிந்த குறைவுகளைத் துரைத்தனத்தார்க்கு அறிக்கைசெய்வதுமன்றி, எனக்குத் தெரிந்தவரையில் அதற்குச் செய்யவேண்டிய பரிகாரங்களையும் இவையென்று எடுத்துக்காட்டுவதாம். இதற்காக நான் அங்கங்கே போய்ச் சுற்றிப்பார்த்துவந்ததில் என் புத்தியில் ஒரு விஷயம் உறுதியாய்ப்

பதிந்துபோயிருக்கிறது. அதாவது, இத்தேசத்துக் குடிகளை வருஷ வாரி பத்திலொருபங்கு வாரிக்கொண்டு போகும் கொள்ளைநோய்க ளான விஷபேதி, விஷச்சுரம், வயிற்றுளைவு முதலியவைகளெல்லாம் முக்கியமாய் அழுக்குத் தண்ணீரை உபயோகிப்பதனாலேயே உண் டாகின்றனவென்பதாம். ஆதலால் இப்போது இங்கே சேர்ந்திருக் கிற மகாசபையின் முன்னே அதைப்பற்றிய தெளிவான சில விஷ யங்களை எடுத்துச் சொல்வதைப்பார்க்கிலும், இவ்விஷயத்தில் என்னை ஒரு உத்தியோகஸ்தனாக நியமித்திருக்கின்ற துரைத்தனத் தார்க்காகட்டும், அந்தத் துரைத்தனத்தார் உள்ளூற பிரீதிபூர்வமாய் ஒரு குறையுமின்றிப் பரிபாலிக்கக் கருதிய குடிகளுக்காகட்டும், நான் செய்யத்தக்க உபகாரம் வேறுண்டோ?

இந்துதேசத்துக் குடிகளும் தண்ணீரும்.

தண்ணீரானது இவ்விந்துதேசத்தாரெல்லாரும் முக்கியமாய்க் கவனிக்கத்தக்க பொருளாம். ஏனெனில் மற்ற விஷயங்களைப்போல இந்தத் தண்ணீரினால் உண்டாகும் சவுக்கியாசவுக்கியங்களையும் இந் துக்கள் வெகுகாலத்துக்குமுன்னமே அறிந்திருக்கிறார்கள். 1879-ஆ த்திலே செய்த உபந்நியாஸத்தில் நான் குறிப்பித்திருப்பதுபோ லவே இத்தேசத்தார் முதல்வைத்தியர்கள். இங்கிலாந்து தேசத்தார் சற்றும் நாகரிகமற்றுக் காட்டுமிருகங்களைப்போல நிர்வாணமாய்த் திரிந்துகொண்டிருந்த காலத்தில் இத்தேசத்தார் மிகு சீர்திருத்தம் பெற்று வைத்தியத்தில் நன்றாய்த் தேர்ந்து வைத்தியத்தொழிலை நடத் துவதிலும் மிக்க வல்லவர்களாகி, அக்காலத்திலேயே தண்ணீரை உபயோகிக்கவேண்டிய விதத்தைப்பற்றியும் பாதுகாக்கவேண்டிய விதத்தைப்பற்றியும் விதிகளும் ஏற்படுத்தினார்கள். இதைப்பற்றி இத்தேசத்து வேதங்களிலும் தருமசாஸ்திரங்களிலும் விசேஷமாக விதித்திருக்கின்றது. அவற்றுள் இரண்டொன்றை அடியிற் குறிப் பிக்கிறேன்.

1. யஜுர் வேதத்தில் ஒரு பாகமான ஆரணத்திலே "தண்ணீ ரில் காறி உமிழாதே; மலமூத்திரங்களைத் தண்ணீரில் விடாதே; தண் ணீரில் ரக்தத்தைப் பெருக்காதே; மயிர், நகம், எலும்பு, சாம்பல் இவைகளைத் தண்ணீரில் எறியாதே; அழுக்குத் துணியைத் தோய்க் காதே; அப்படிச் செய்தால் நமக்குக் கடவுள் கொடுத்திருக்கும் நன்கொடைகளைத் துர்விநியோகப்படுத்தி அவரை அவமதிப்பதா கும்" என்றிருக்கிறது.

2. ஸ்மிருதிகளிலும் இதைப்பற்றி விசேஷமாகச் சொல்லியிருக் கின்றது. அவையாவன:—

நமக்கு அறிமுகமில்லாத ஒருவன் காய்ச்சிய நீர், நுரைத்த தண் ணீர் (இது சோடா தண்ணீராய் இருக்கலாம்), அழுக்கடைந்து தடிப்

பான தண்ணீர், கெட்ட நாற்றமுள்ள தண்ணீர், குமிழியிட்டுக் கிளம்புகிற தண்ணீர், வெந்நீர், மண்கலந்த தண்ணீர், உப்புத்தண்ணீர் இவ்வெட்டுவிதமான தண்ணீரையும் குடிக்கக்கூடாது என்று யாக்ஞியவல்கியர் விலக்கியிருக்கிறார்.

கண்ணோவுக்காரர், காதிலாவது தலையிலாவது சிரங்குள்ளவர்கள், காக்கைவலியுள்ளவர்கள், புண்ணுள்ளவர்கள், க்ஷயரோகம், குஷ்டம், வைசூரி, அதிசாரபேதி, விஷபேதிமுதலிய தொத்து நோய் உள்ளவர்கள் இவர்களெல்லாம் குளித்தும் துணிதோய்த்தும் அழுக்காக்கின ஏரிகுளங்களில் ஸ்நாநம்பண்ணக்கூடாதென்று சாதாதபர் மறுத்திருக்கிறார்.

3. ஸ்ரீமத்ராமாயணம் அயோத்தியாகாண்டத்தில் பரதர் பிரதிஞ்ஞைபண்ணும்போது, ஸ்ரீராமனைக் காட்டுக்குப் போம்படி அநுமதி கொடுத்தவன், குடிக்கிற தண்ணீரைக் கெடுப்பவனுடைய பாபத்தில் போகக்கடவனென்று சபதம்பண்ணியிருக்கிறார். இதைப் பார்க்கையில் குடிக்கிற தண்ணீரைக் கெடுப்பதனால் உண்டாகும் பாபம் ஒருவனை நரகத்தில் சேர்க்கும்படி அவ்வளவு கொடியதென்று பரதன் கருதியதாய்த் தெளிவாகின்றது.

4. பாகவதபுராணத்தில் பதினோராவது ஸ்கந்தத்திலே உத்தவ கீதையில், அழுக்கற்ற துணியினால் வடிகட்டின தண்ணீர் தவிர மற்றத் தண்ணீரைக் குடிக்காதிருக்கும்படி கண்ணன் உத்தவருக்கு உபதேசித்திருக்கிறார்.

5. மனிதருடைய கைகால் முதலிய அவயவங்களைக் கழுவி மிகுந்த தண்ணீரையும், ஒருவன் குடித்து மிகுந்த தண்ணீரையும், வண்ணான்துறை, சண்டாளர் முதலிய இழிஜனங்கள் குளிக்குமிடம், மாதவிடாய்ப் பெண்கள், பிரசவித்த பெண்கள் இன்னும் மற்ற அழுக்குள்ள ஜனங்கள் இவர்களெல்லாம் ஸ்நாநம்பண்ணுமிடம் இவற்றை அடுத்துள்ள தண்ணீரையும், ஒருவரும் உபயோகிக்கக் கூடாதென்று யாக்ஞியவல்கியர் மறுபடியும் நிஷேதித்திருக்கிறார்.

தருமவிதிகளும் நல்லொழுக்கங்களும்.

மலமூத்திரங்கள், எச்சில், அழுக்குத்துணி முதலியவை, ரக்தம், இவைபோன்ற விஷவஸ்துக்களைத் தண்ணீரில் விடாமலிருக்க வேண்டுமென்று மனு தருமசாஸ்திரத்தில் நான்காவது அத்தியாயத்திலே சொல்லப்பட்டிருக்கிறது.

(இந்த மேற்கோள்களெல்லாம் என்னுடைய நேசரான வ. கிருஷ்ணமாசாரியருடைய உதவியைக்கொண்டு இந்துக்கள் மிகச் சிறந்ததாகக் கொண்டாடுகிற வைத்தியநாததீக்ஷிதர் செய்த தருமசாஸ்திரத்தில் ஆசாரகாண்டத்திலிருந்து கண்டெடுத்து இங்கே உதாகரிக்கப் பட்டன.)

இந்த விதிகளைப் பரிபாலிக்கிற விதம்.

இந்த விதிகளின் வசனங்கள்மட்டும் இன்னும் பரிபாலிக்கப்பட்டு வருகின்றனவாயினும், அதன் தாற்பரியம்மாத்திரம் அதிகமாய்க் கவனிக்கப்படவில்லை. இந்த விதிகளுக்கெல்லாம் தாற்பரியம் என்னவெனின், சிறிதும் அழுக்கில்லாமல் மிகப் பரிசுத்தமான தண்ணீரையே வீட்டு வியாபாரங்களுக்கு உபயோகிக்கவேண்டுமென்பதும், இழிஜனங்களுடைய ஒழுக்கங்கள் அவ்வளவாகப் பரிசுத்தமாய் இராதென்பதுபற்றி, உயர்ந்த ஜனங்களுக்கு உபயோகப்படும் தண்ணீரை இழிஜனங்கள் உபயோகிக்கக்கூடாதென்பதுமேயாம். அப்படியிருக்க இப்போது வெகுவாய் இத்தேசத்து உயர்ந்த வகுப்பினர்கள் உபயோகிக்கும் குளம் கிணறுகளில் காணப்படும் அசுத்தங்களைப் பார்க்கிலும் அருவருப்பானவைகள் வேறெங்கும் இல்லை. நான் போனவிடங்களில் கண்ட சில விஷயங்களை இதனடியில் எடுத்துச் சொல்லுகிறேன். நான் போம்போதும் வரும்போதும் பல தடாகங்களைப் பார்த்தேன்; அவற்றுள் இரண்டொரு உதாரணமெடுத்துக் காட்டுகிறேன்.

சேலம்ஜில்லாவிலுள்ள ஹ-சூரிலே சுவாமியினுடைய மலையடிவாரத்திலே நன்றாய்க் கட்டிய சிறுகுளமொன்று இருக்கக்கண்டேன். அதில் புருஷர்கள் ஸ்திரீகளெல்லாரும் ஸ்நாநம்பண்ணுவதும் துணி தோய்ப்பதுமாய் இருந்தார்கள். ஒரு சமயத்தில் பன்னிரண்டு பேர் அப்படி ஸ்நாநம்பண்ணிக்கொண்டிருந்தார்கள். அப்போது ஒரு பெண்பிள்ளை ஒரு பெரிய மூட்டைதுணியைக் கொண்டுவந்து அவற்றையெல்லாம் யதாசாவகாசமாய்த் தோய்த்துத் தானும் ஸ்நாநம்பண்ணித் தன் அரைத்துணியையும் தோய்த்துப் பிறகு தான் கொண்டுவந்த குடத்தில் தண்ணீர் மொண்டுகொண்டு போய்விட்டாள். இப்படியே இன்னும் அநேகர் தண்ணீரிலே எச்சிலைக் காறிக் காறித் துப்பித் துணிதோய்த்து ஸ்நாநம்பண்ணிவிட்டுப்போகக் கண்டேன். அந்தத் தண்ணீரையே அநேகம் ஸ்திரீகள் குடங் குடமாய் வீட்டுக்கு எடுத்துக்கொண்டு போனார்கள். நான் அந்தத் தண்ணீரை இரண்டுகுப்பிகளில் எடுத்துக்கொண்டு போய்ப் பரிசோதனை செய்துபார்த்தேன்; அது கொஞ்சம் பசுமைகலந்த வெண்மைநிறமும், ரோகம் தருவதான ஒரு கெட்ட நாற்றமும், வெறுங் கண்ணுக்குக்கூட நன்றாய்ப் புலப்படும்படியான சிறு புழுக்களும் உள்ளதாய் இருந்தது. அந்தப் பூச்சிகளைப் பார்க்கப் பூதக்கண்ணாடி கூடத் தேவையில்லை; நமது வெறுங்கண்ணே போதும். அதை நான் இன்னும் நன்றாய்ப் பரிசோதனை செய்துகொண்டிருக்கையில் அவ்விடத்திலுள்ள சுதேச உத்தியோகஸ்தர் ஒருவர் பலவிஷயங்களைப்பற்றி என்னோடு பேசவந்தார். இந்தத் தண்ணீரைப் பானத்துக்குக் கூட உபயோகிக்கிறார்களாவென்று நான் அவரைக் கேட்ட

தற்கு, அவர், ஆம், இது மிகவும் நல்லதண்ணீர், வாய்க்கு மதுரமாயிருக்கும், இவ்வூராரெல்லாம் பானத்துக்கு இதையே முக்கியமாய் உபயோகப்படுத்துகிறார்கள் என்றார். இது எனக்கு ஸானிடெரி கம்மிஷனர் என்னும் தேசசவுக்கிய விசாரணைத்தலைவர் உத்தியோகம் ஏற்பட்ட சிலநாளைக்கெல்லாம் நடந்த செய்தி. அதுமுதல் நான் அநேகம் குளங்களைப் பார்த்திருக்கிறேன். அவ்விடங்களிலும் இதே விதமாகத்தான் நடந்துவருகின்றது. அதைப்பற்றி அங்கங்குள்ளவர்களைக் கேள்விகேட்டால் அவர்களும் இதேவிதமான விடையே கொடுக்கிறார்கள். ஆனால் சிலவிடங்களில்மட்டும் இப்படித்துணி தோய்ப்பதுமுதலியவற்றால் கெட்டுப்போன தண்ணீரைப் பானத்திற்கு உபயோகிப்பதில்லையென்றும், தண்ணீர்கொண்டுபோவதற்கு வேறு குளமும், துணிதோய்த்து ஸ்நானம்பண்ணுவதற்கு வேறு குளமுமாக ஏற்படுத்தப்பட்டிருக்கிறதென்றும் கேள்விப்படுகிறேன். சிதம்பரத்தில் இப்படித்தான் நடக்கின்றது. இப்படி ஸ்நாநத்துக்கும் பானத்துக்கும் வெவ்வேறு குளங்களை உபயோகப்படுத்துகிறவர்களுண்டானால் அவர்கள், தேகசவுக்கியத்துக்கு அவசியமென்று ஐரோப்பிய சுகாதார சாஸ்திரங்கள் விளக்கிச்சொல்லிய நீதிகளோடு ஒத்து நடக்கிறார்களென்பதுமாத்திரமேயல்ல, மிகுந்த புத்திசாலிகளான தம்முன்னோர்கள் ஸ்தாபித்த விதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டு நடப்பவர்களென்று நான் உறுதியாய்ச் சொல்லுவேன்.

சென்றவருஷத்துக் கடைசியில் வடமேற்குத் திசையிலிருந்து இச்சென்னை ராஜதானியில் விஷபேதிவந்து வியாபித்தபோது, மிகுந்த சாமர்த்தியமுள்ளவரான ஒரு கலெக்ட்டர், தாம் ஜில்லா கெஜெட்டில் பிரசித்தப்படுத்தவேண்டுமென்று, கிராம சுகாதாரங்களுக்கு முக்கியமான சில விதிகளைச் சுருக்கித் தெளிவாய் எழுதித் தரவேண்டுமென்று கேட்டார். பிற்பாடு நான் எழுதிக்கொடுத்த அந்த விதிகளால் மிகுந்த நன்மை உண்டாயிற்றென்றும், அவ்விதிகள் ஜனங்களுக்குச் சுலபமாயும் எளிதில் அறிந்துகொள்ளத்தக்கவையாயும் இருந்தனவென்றும் அக்கலெக்ட்டர் முகமாய்க்கேள்விப்பட்டு, இந்த ராஜதானியிலுள்ள நகர கிராமவிசாரணைத்தலைவர் ஒவ்வொருவருக்கும் அதில் ஒவ்வொரு பிரதி கொடுத்தனுப்பினேன். சிலநாளைக்கு முன்னே நான் இச்சென்னைக்கு வடக்கே ஒரு நகரவிசாரணைச் சங்கத்தை மேல்விசாரணை செய்தபோது, அவ்விடத்து மானேஜர் அந்தச் சபையாருடைய தீர்மானமொன்றைக் காட்டினார். அதில், என்னுடைய பத்திரிகையில் சொல்லிய விஷயங்களை எல்லோரும் கவனிக்கவேண்டுமென்றும், அங்கே சிறந்த இரண்டு குளங்களை மற்றொரு காரியமும் செய்யாமல் பானத்துக்கென்றே தனியாக வைத்திருக்கவேண்டுமென்றும், அவற்றில் பிரஜைகள் வந்து குளித்துக் கைகால் கழுவாதபடி ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு போலீசு

சேவகனைக் காவல்வைக்கவேண்டுமென்றும் கண்டிருந்தது. அதைப் பார்த்தபோது நம்முடைய முயற்சி ஈடேறி வருகிறதென்று நான் மிகப் பெருமையும் களிப்பும் அடைந்தேன். மறுநாள் காலையில் நான் அந்நகரத்தைச் சுற்றிப் பார்த்துக்கொண்டுவருகையில், என்னுடன் வந்த நகரவிசாரணைக் காரியகாரன் சிறிதுதூரத்தில் ஒரு கரையைக் காட்டி, அதுதான் ஸ்நாநம் முதலியவை செய்யவொட்டாமல் நாம் நிர்ப்பந்தஞ்செய்திருக்கின்ற குளங்களுள் ஒன்றின் கரையென்றார். அதைக்கேட்டு நான் ஆனால் அதை அவசியம் போய்ப் பார்க்க வேண்டுமென்று எங்களோடுவந்த அவ்விடத்து வைத்தியனையும் கூடக் கூட்டிக்கொண்டு அக்குளத்தண்டைக்குப் போனேன். அது மிகப் பெரிதான குளம். மைலாப்பூர் பெரிய குளத்தைப்போல் இரட்டத்தனை பெரியதாய் இருக்கும். நாங்கள் போனபோது அக்குளத்தைச் சுற்றிலும் ஜனங்கள் நிறைந்திருந்தார்கள். வெகுவாய் அவர்களெல்லாரும் அதிக அவசரமாய்த் துணிதோய்ப்பவர்களும் ஸ்நாநம்பண்ணுபவர்களுமாய் இருந்தார்கள். அதைப் பார்த்தபோது என்னுடன் வந்த நகரவிசாரணைக் காரியகாரருடைய முகத்தில் ஒரு விதமான நகைப்பு உண்டாயிற்று. அக்குளத்தில் நாங்கள் போய் நின்றவிடத்துக்கு நேராய் ஒரு கிழவன் கொஞ்சம் அழுக்கான ஒரு துணியைத் தோய்த்துப் பிறகு குளித்துப் பலதடவை தண்ணீரில் எச்சில் உமிழ்ந்தான். அவன் போன இரண்டொரு நிமிஷத்துக்கெல்லாம் ஒரு பெண்பிள்ளை அங்கு வந்து, அந்தக் கிழவன் நிமிஷத்துக்குமுன் குளித்துப்போனவிடத்திலேயே இறங்கி இரண்டு தவலைகளில் வீட்டுக்குத் தண்ணீர் கொண்டுபோனாள். அந்தக் கிழவனுடைய துணியின் அழுக்குகளில் கொஞ்சமும் அவன் உமிழ்ந்த எச்சலில் கொஞ்சமும் அவள் தான் குடிக்க வீட்டுக்குக் கொண்டுபோனாளென்பதற்குச் சந்தேகமுண்டோ? இதென்ன கெட்ட அபிப்பிராயம்! அன்றையதினம் பலதடவை வெகுவாய் அவ்வண்ணமே நடந்துவந்தது. அந்த ஒரு குளத்தைச்சுற்றிமாத்திரமேயல்ல; மிகப் பெரிய கண்டம்போன்ற இவ்விந்துதேசம் முழுதிலுமுள்ள அநேகமாயிரம் குளங்களிலும் இவ்வண்ணமே நடந்து வருகின்றது. இப்படியானால், இத்தேசத்தில் எங்கேயாவது ஒரு மூலையில் கொஞ்சம் தலைகாட்டுகிற வைசூரி, வாந்திபேதி, விஷசுரம் முதலிய கொள்ளைநோய்கள் அவ்வளவோடு அடங்காமல் அதிக வேகமாய் எங்கும் பரவுகிறதென்பதைக் கேட்டு நாம் வியக்கக் காரணம் என்னயிருக்கின்றது! ஆயினும் அதற்குச் செய்ய வேண்டிய வைத்தியம்மாத்திரம் வெகு சுலபமானதுதான்.

இப்படிப்பட்ட விஷயங்களில் எவ்விதமான கட்டளையானாலும் அதற்கு இத்தேசத்து ஜனங்கள் உட்படுகிறவர்களாகவேயிருக்கிறார்கள். ஆதலின் இங்கே நான் சொல்லிய முனிசிபாலிட்டியாருடைய தீர்மானமாகட்டும், அல்லது அதினும் சிறந்த உங்கள் பூர்வ தரும

சாஸ்திரிகளுடைய உயர்ந்த விதிகளாகட்டும் இவைகளெல்லாம் வழக்கத்தில் கொண்டுவரப்படுமாயின், இந்தத் தீமைகளையெல்லாம் வெகு சுலபத்தில் தடுத்துவிடக்கூடும். தொத்துநோய் தொடரு கிறதென்பதிருக்கட்டும்; யாரோ ஒருவன் தன் உடம்பு அழுக்குகளை யெல்லாம் கழுவிவிட்ட தண்ணீரை நாம் குடிக்கிறதென்பது எவ்வ ளவு அருவருப்பானது. இது நம்முடைய மனதுக்கே பிரியமில்லாம லிருப்பதோடுகூட, முற்காலத்து மகரிஷிகள் தருமசாஸ்திரிகள் இவர் களுடைய விதிகளுக்கும் நேர்விரோதமாய் இருக்கின்றதல்லவா? இவ்விஷயத்தில் முக்கியமாய்க் கவனிக்கவேண்டியது ஒன்றுண்டு. வீணாய்க் கடிதத்தில் ஒரு உத்தரவு பிறப்பித்தமாத்திரத்திலே ஒரு பிரயோஜனமுமில்லை; ஒருவன் முயன்று அதை நடத்தையில் கொண் டுவரவேண்டும். அப்படியில்லாதபக்ஷத்தில் உத்தரவுமாத்திரம் பிறப் பிப்பதனால் ஒரு நன்மையும் விளையாது. மேலேசொன்ன பட்டண த்து ஜனங்களின் கதையைக் கேட்டீர்களல்லவா? அப்படியின்றி ஜனங்கள் இந்த விதிகளுக்கு அடங்கி நடப்பார்களானால் வியாதிகள் விசேஷமாய் அடங்கிப்போம். அதன் விவரங்களை வருகிற சஞ்சி கையில் விவரிக்கலாகும்.

அபாயம் உண்டாக்கும் ஒரு தீவு.

வெகுகாலத்துக்குமுன்னே ப்ளாரென்ஸ் நகரத்தில் பிந்து வென்று ஒரு வர்த்தகன் இருந்தான். அவன் பலதடவை தேசாந் தரங்களுக்கு விசேஷமான வர்த்தகச்சரக்குகளோடுகூடக் கப்பல் யாத்திரைசெய்துபோய்த் திரண்ட திரவியம் சேர்த்துக்கொண்டு வந்து மிகுந்த செல்வவானானான். அவனுக்குப் பிள்ளைகள் மூன்று. அம்மூவரும் அவனுடைய மரணகாலத்தில் ஏற்ற பருவமடைந்து மிக்க வல்லவர்களாய் இருந்தார்கள். பிந்துவானவன் தனக்கு மரண காலம் நெருங்கியதெனத் தெரிந்தபோது தன்னுடைய மூத்தபிள்ளை கள் இருவரையும் தன்னிடத்துக்கு அழைப்பித்து, தன்னுடைய ஆஸ் திகள் எல்லாவற்றிற்கும் அவ்விருவருமே பாத்தியஸ்தர்களென்று சொல்லி, அவர்கள்மாத்திரமே அதைப் பாகித்து அனுபவித்துக் கொள்ளவேண்டியதென்று மரணசாஸனம் எழுதிவைத்தான். கடைசிமகனுக்கு ஆஸ்தி சிறிதும் வைக்கவில்லை. இவ்விதமாகத் தந்தை மரணசாஸனம் எழுதிவைத்த செய்தி கேள்விப்பட்டு ஜகந் நாதன் என்கிற கடைசிமகன் மிகவும் விசாரமுற்றவனாய்த் தகப்ப னண்டைக்கு வந்து, என் அருமைத் தந்தையே, நீங்கள் இப்போது நிறைவேற்றிய காரியத்தைக் கேட்க எனக்கு மிகவும் ஆச்சரியமா கின்றது. தாங்கள் மரணசாஸனம் எழுதும்போது தங்களுக்கு

நானும் ஒரு மகனிருக்கிறேன் என்கிற சிந்தையே உண்டாகவில்லை போலும் என்றான். அதுகேட்டுத் தந்தை, என் செல்வப்புதல்வனே, எனக்கு உன்னிடத்திலுள்ள அன்பு இவ்வுலகில் மற்று எவரிடத்திலுமில்லை; நான் உன்னை ஒருபோதும் மறவேன். நீ இவ்வுலகத்தில் எல்லோரையும்விட மிகச் சிறப்பாக வாழ்ந்திருக்கவேண்டுமென்றே நான் என் ஆஸ்தியில் உனக்குச் சிறிதும் பாகங்கொடுக்கவில்லை. என் காலத்துக்குப்பிறகு நீ இவ்விடத்தில் இருக்கக்கூடாது. வெனிஸ் நகரத்திலிருக்கும் குணசீலன் என்ற உன்னுடைய ஞானசாரியனிடம் போய்ச் சேரவேண்டும். அவன் தனக்குப் பிள்ளையில்லாமையால் உன்னை அவ்விடத்துக்கு அனுப்பிவிடும்படி என்னைப் பலதரம் வேண்டிக் கேட்டிருக்கிறான். அவன் எப்படிப்பட்டவன் தெரியுமா? கிறிஸ்தவ வர்த்தகர்களுள் மிகுந்த சம்பத்துள்ளவன். அவனிடம் போய்ச் சேர்ந்தால் வெகு செல்வமாக வாழ்ந்திருக்கலாம். ஆதலால் என் காலத்துக்குப் பிறகு நீ இந்தக் கடிதத்தை எடுத்துக்கொண்டு அவனிடம் போய்ச் சேர். அவன் உன்னைப் புத்திரனாக ஸ்வீகாரம்செய்துகொண்டு வயிற்றிற்பிறந்த பிள்ளையைப் பார்க்கிலும் அதிக அபிமானத்தோடு ஆதரிப்பான். நீ யோக்கியனாய் அடங்கி நடப்பாயானால் உனக்கு ஒருவரும் ஈடாகமாட்டார்கள் என்றான். அதைக் கேட்ட ஜகந்நாதன், ஐயா, எப்படி நியமிக்கிறீர்களோ அப்படி நடக்க நான் காத்திருக்கிறேன் என்று சொல்ல, தந்தை அவனை ஆசீர்வதித்துக் குணசீலன்பேருக்கு ஒரு கடிதமும் எழுதி அதை அவன் கையிற்கொடுத்தான்.

இப்படியிருக்கச் சிலநாளையில் அந்தக் கிழவன் இறந்துபோனான். தந்தை இறந்துபோனதற்காக அவன் பிள்ளைகளெல்லாம் நெடுநேரம் புலம்பிக் கடைசியில் மிகுந்த விபத்தோடும் மரியாதைகளோடும் அவன் உடலை அடக்கஞ்செய்தார்கள்.

அக்காலத்தில் அவனுடைய மூத்தபிள்ளைகள் இருவரும் நன்னடக்கையும் உதாரகுணமும் உடையவர்களாய் இருந்தார்கள். தகப்பனுருடைய சரமகாரியங்களையெல்லாம் நிறைவேற்றினபிறகு அவ்விருவரும் தம் அருமைத்தம்பியை அழைப்பித்து, குழந்தாய், நம்முடைய தகப்பனார் தம் ஆஸ்தியெல்லாம் எங்களுக்குமாத்திரமே எழுதிவைத்தாரேயொழிய உன்னைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லையென்பது மெய்தான்; ஆயினும் எங்களைப்போல நீயும் அந்தத் தகப்பன் வயிற்றில் பிறந்தவன்தானே. ஆதலால் இப்போது உள்ள நமது தகப்பனுருடைய ஆஸ்தியைப்பற்றி எங்களுக்கு எவ்வளவு பாத்தியதை உண்டோ அவ்வளவு உனக்கும் உண்டு. ஆதலால் தகப்பனுருடைய ஆஸ்தியை நாம் மூவரும் சரியாய் மூன்றுபாகமாகப் பாகித்து எடுத்துக்கொள்வதே நலம் என்றார்கள். அதைக் கேட்டுக் கடைசிமகன், சகோதரர்களே, நீங்கள் என்னிடத்தில் இவ்வளவு பிரீதிபாராட்டுவதற்காக நான் உங்களிடத்தில் மிகவும் நன்றியுள்

ளவனுகிறேன். நானும் உங்களோடுகூடவே சுகமாக வாழ்ந்து கொண்டிருக்கவேண்டுமென்றுதான் நீங்கள் இந்த ஏற்பாடுசெய்ய நினைத்தீர்கள். ஆயினும் அப்படியிருக்க எனக்கு விருப்பமுண்டாகவில்லை; தேசாந்தரம்போய்த் தானேவருந்திப் பொருள்தேடி அதைக்கொண்டு ஜீவிக்கவேண்டுமென்றே அதிக அபேக்ஷையாயிருக்கின்றது. ஆதலால் நமது தகப்பனுருடைய திருவுள்ளப்படி நீங்களே பிதிரார்ச்சிதமான சொத்தை அனுபவித்துக்கொண்டு சுகமாயிருங்கள் என்றான். அதுகேட்டு மூத்தவர்கள் அவனுடைய நோக்கத்தைத் திருப்பத் தங்களாலாகாதெனக் கண்டு அவனுக்கு ஏறிச் சவாரிசெய்துகொண்டுபோவதற்கு ஒரு சிறந்த குதிரையும், வழிச் செலவுக்குவேண்டிய பொருளும் கொடுத்தார்கள். பின்பு ஜகந்நாதன் அவர்களிடத்தில் விடைபெற்றுக்கொண்டு வெனிஸ் நகரம்போய் அங்கே குணசீலனிருக்கும் இடம் விசாரித்துக்கொண்டு அவனிடம்சென்று, இறப்பதற்குமுன் தன் தந்தை கொடுத்துப்போன கடிதத்தை அவன் கையிற்கொடுத்தான். குணசீலன் அம்மகனைப் பார்த்தவுடனே அவன் தன் உயிர்த்தோழனுன பிந்துவின் குமாரனென்று தெரிந்துகொண்டான். அதன்மேல் அவன் கொண்டுவந்த கடிதத்தையும் படித்துப்பார்த்து அதிக சந்தோஷமடைந்து, குழந்தாய் க்ஷேமமாய் வந்து சேர்ந்தாயா என்று சொல்லி அம்மகனை அணைத்து முத்தமிட்டுக்கொண்டு, என் செல்வமகனே, உன்னைப் பார்க்கவேண்டுமென்று நான் நெடுநாளாய் அபேக்ஷைகொண்டிருந்தேன். என் மனோரதம் வீண்போகாமல் வந்து சேர்ந்தாயே. உன் தகப்பனுர் முதலானவர்களெல்லாரும் க்ஷேமமாயிருக்கிறுர்களா என்று கேட்டான். தகப்பன் இறந்துபோன சமாசாரத்தை அம்மகன் சொல்லவே குணசீலன் அதிக விசனங்கொண்டு, அதைப் பற்றி அம்மகனுக்குச் சில உபசாரவார்த்தைகள் சொன்னுன். பிறகு, குழந்தாய் உன் தகப்பனுர் எனக்கு மகோபகாரி; இவ்வளவு செல்வமும் எனக்கு அவராலேதான் கிடைத்தது. ஆயினும் இத்தருணத்தில் நீ என் எதிரிலே நிற்பதினுல் உன் தகப்பனுர் இறந்துபோனதனுல் உண்டான துக்கம் எனக்கு அத்தனையாகத் தோன்றவில்லை என்று இப்படிச் சற்றுநேரம் பேசிக்கொண்டிருந்தான். பின்பு அம்மகனை வீட்டிற்குள் அழைத்துக்கொண்டு போய்த் தன் சேவகர்கள், பரிசாரகர்கள் எல்லோரையும் அழைப்பித்து, தன்னைப்பார்க்கிலும் பத்துப்பங்கு அதிகமாய் அம்மகனுக்கு எல்லோரும் அடங்கிப் பணிவிடைசெய்துவரவேண்டும் என்று திட்டஞ்செய்ததுமன்றி, வீட்டிலுள்ள அறைகள் சாமான்கள் பெட்டிபேழைகள் எல்லாவற்றையும் அவ்வருமைமகனுக்குக் காட்டி, தன் ஆஸ்திகளையும் தெரியப்படுத்தி, அவையெல்லாவற்றையும் அவன் வசத்திலேயே ஒப்புவித்து, பணப்பெட்டியையும் அவன் கையிலேயே கொடுத்து, குழந்தாய், இனி நீயே இந்த ஆஸ்திகளுக்

கெல்லாம் உரியவன்; இவற்றை நீ உன் இஷ்டப்படி செலவழிக்கலாம்; நீ உனக்கு வேண்டிய ஆடையாபரணங்களையெடுத்து அணிந்துகொள்ளலாம்; விசேஷமாக தானதருமங்கள் செய்ய விருப்பமிருந்தால் செய்யலாம்; சிநேகிதர்களுக்கு விருந்துசெய்ய விருப்பமிருந்தால் விருந்தளிக்கலாம்; உன் இஷ்டத்துக்குத் தடைசொல்வார் இங்கு ஒருவருமில்லை என்றான்.

பின்பு அந்த மகன் தன் ஞானசாரியனுடைய உத்தரவுப்படியே அவற்றையெல்லாம் தானே கைக்கொண்டு மிகப் பெருந்தன்மையோடு கம்பீரமாக நடந்துவந்தான். அடிக்கடி கனவான்களைச் சபைகூட்டி விருந்தளிப்பான்; தானதருமங்களும் வெகுமதிகளும் விசேஷமாகச் செய்வான்; தன் சேவகர்களையெல்லாம் ஏற்றபடி அடக்கிப் பரிபாலித்துவருவான். இவற்றோடு லோகோபகாரமான பல நன்மைகளும் செய்துவந்தான். அவன் தான் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் மிகத் திறமையும் யுக்தி உபாயங்களும் உடையவனாகி ஒரு தேசாதிபதிபோல நடந்துவந்தான். ஆயினும் பெரியோர்களிடத்தில் வணக்கமும் மரியாதையும் ஒருபோதும் தப்புவதில்லை; தன் சொந்த பிதாவைப்பார்க்கிலும் பத்துப்பங்கு அதிகமாய் அந்த ஸ்வீகாரபிதாவினிடத்தில் மிகுந்த வணக்கமும் அடக்கமும் பயபக்தியுமாக நடந்து அவனை மிகவும் பெருமைப்படுத்திவந்தான்.

இப்படியிருக்க ஒரு சமயத்தில் ஜகந்நாதனுடைய சிநேகிதர்கள் இருவர் வருஷந்தோறும் தாங்கள் போகிற வழக்கப்படியே சாமான்களோடு ஆபிரிக்கா தேசத்துக்குப் போக நிச்சயித்து அச்செய்தியை ஜகந்நாதனோடு சொல்லி, தோழனே, உன்னையும்கூடக் கூட்டிக்கொண்டு போகவேண்டுமென்று எங்களுக்கு அதிக அபேக்ஷையாயிருக்கிறது. அத்தேசங்களிலுள்ள அதிசயங்களை நீ ஒருபோதும் பார்த்ததில்லையே; எங்களுடன் வந்தால் அவற்றையெல்லாம் விநோதமாய்ப் பார்த்துவிட்டு வரலாம் என்றார்கள். அதைக்கேட்டு அவன், ஆம், தேசாந்தரங்களைப் போய்ப் பார்த்துவிட்டுவரவேண்டுமென்று எனக்கும் அதிக அபிலாஷையாகத்தான் இருக்கிறது. என் தந்தை உத்தரவுகொடுத்தால் அவசியம் வருகிறேன் என்று சொல்ல, அவர்கள், அதைப்பற்றி உனக்கு விசாரம்வேண்டாம், அவனைக் கேட்டு நாங்கள் அநுமதிபெற்றுக்கொள்கிறோம் என்று சொல்லி, உடனே குணசீலனிடத்துக்குப் போய், ஐயா, உங்களை ஒருவிஷயம் வேண்டிக் கேட்கவந்தோம்: இந்த வஸந்தகாலத்தில் எங்களோடுகூடத் தங்கள் செல்வமகனை ஆபிரிக்காதேசத்துக்குப் போய்வரும்படி அனுப்பத் தங்களுக்குச் சம்மதிதானா? அவனும் போய்வரவேண்டுமென்று மிகவும் ஆசைப்படுகிறான் என்றார்கள். அவனுக்கு இஷ்டமிருந்தால் எனக்கும் சம்மதிதான்; சுகமாய்ப் போய்வரட்டும் என்று குணசீலன் உத்தரவுகொடுத்தான்.

பின்பு அவன் தன் செல்வப்புதல்வனுக்காகச் சிறந்த கப்ப

லொன்று சிங்காரித்து அதில் வேண்டிய சாமான்களும் ஏற்றிப் பிரயாணத்துக்குச் சித்தப்படுத்தினன். அப்போது அப்பட்டணத் தாரெல்லாரும் திரண்டு ஓடிவந்து அக்கப்பலின் அதிசயத்தைப் பார்த்து மிகவும் வியந்தார்கள். பாய்மரங்களும் கொடிச்சீலைகளும் கட்டிக் கப்பல் பிரயாணத்துக்குச் சித்தமாயிற்று. அப்போது குணசீலன் கப்பற்காரர்களைப்பார்த்து, இது நம்முடைய குழந்தை விநோதத்துக்காகப் போகிற பிரயாணமேயன்றி வியாபாரத்துக்காகப் போகிறதல்லவென்று உங்களுக்குத் தெரியுமே. ஆதலால் திரவியலாபத்தையே பெரிதென்று பாராமல் அவன் தன் வேடிக்கைக்காக எந்தக்காரியம் செய்யச் சொன்னாலும் நீங்கள் ஒரு ஆக்ஷேபமும் சொல்லாமல் அவன் உத்தரவுப்படியே நடந்துகொண்டு போய்ப் பத்திரமாய் வந்து சேரவேண்டும் என்று திட்டஞ்செய்தான். துறையைவிட்டுக் கப்பல் புறப்படச் சித்தமாயிற்று. காற்றும் வாட்டமாக வீசியது. அந்தச் செல்வக்குமாரன் தூரதேசம் போகிறானேயென்று அப்பட்டணத்தாரெல்லாம் மிகவும் விசனமுற்றுக் கடற்கரைக்குவந்து அவன் முகத்தைப் பார்த்துக்கொண்டே நின்றார்கள். அப்போது அந்தக் குமாரன் அவர்களிடத்தில் விடைபெற்று ஸ்வாமியைத் தியானம்பண்ணிக்கொண்டே கப்பலேறிச் சென்றான்.

ஆயினும் ஜகந்நாதன் தான் நினைத்தபடி ஆபிரிக்காதேசத்து அலெக்சாண்டிரியா பட்டணத்துக்குப் போய்ச் சேரவேயில்லை. அம்மூன்று சிநேகிதர்களும் தனித்தனி மூன்று கப்பல்களிலேறி அதிக வேகமாய்ப் போய்க்கொண்டிருக்கையில், ஒருநாள் விடியநேரத்தில் ஜகந்நாதன் ஒரு பக்கத்தில் சிறிதுதூரத்திலே ஒரு குடாக்கடலும் அக்குடாவில் கம்பீரமான ஒரு கப்பல் அடைக்கலத்துறையும் இருக்கக்கண்டு தன் கப்பல்காரனைப் பார்த்து, அதோ கப்பல் ரக்ஷணஸ்தானமொன்று தெரிகிறதே அது எவ்விடம்? அதன் செய்தியென்னவென்று கேட்க, கப்பலோட்டி, ஐயா அது ஒரு பெண்பிள்ளையினுடைய சுவாதீனத்திலிருக்கும் ஓர் பட்டணம்; ஆனால் அவள் அநேகம் கனவான்களுக்குப் பிரமாதம் விளைவித்திருக்கிறாள் என்றான். அதெப்படி? அதன் வரலாறென்ன சொல்லென்று ஜகந்நாதன் மறுபடி வினவினதற்கு அவன், ஸ்வாமி, அச்சீமாட்டி அழகிற்சிறந்த பவழக்கொடிபோலும்; ஆயின் அவள் மிகப் பிடிவாதத்துடன் ஒரு பிரதிஞ்ஞை செய்துகொண்டிருக்கிறாள்: அதாவது, எவன் அவ்விடத்துக்கு வந்தாலும், அவன் இராத்திரி அங்கேயே படுத்துக்கொள்ளவேண்டும்; படுத்து நித்திரைசெய்யாமல் மறுநாள் சூரியோதயமாகிறவரையில் கண்விழித்துக் காத்துக்கொண்டிருப்பானாயின், அவன் அவளைக் கலியாணம் செய்துகொண்டு அத்தேசத்துக்கெல்லாம் ராஜாவாயிருக்கலாம். அப்படியின்றி அவன் ஒருவேளை கண்ணயர்ந்து தூங்கிப்போவானானால், தான் கொண்டுவந்த பொருள் அனைத்தையும் அங்கேயே பறிகொடுத்துவிட்டு ஒன்றுமில்

லாமல் ஓடிப்போகவேண்டுவதுதான் என்று இப்படி பிரதிஞ்ஞை பண்ணிப் பிரசித்தஞ்செய்திருக்கிருள் என்ருன். அதைக் கேட்டு ஜகந்நாதன் சற்றுநேரம் ஆலோசித்துத் தானும் அவ்விடத்தைப் போய்ப் பார்த்துவரவேண்டுமென்று நிச்சயித்துக் கப்பற்காரனை நோக்கி, ஆனல் நாமும் அங்கே போய் அந்த அதிசயத்தைப் பார்த்துவிட்டு வருவோம்; அதற்கு நேராகவே கப்பலைத் திருப்பி ஓட்டு என்ருன். அதற்குக் கப்பலோட்டி, ஸ்வாமி, அவசரப்பட்டு ஒரு காரியஞ்செய்வது யோக்கியமன்று. "நுண்ணியகருமமு மெண்ணித்துணி" என்கிறபடி எதையும் முன்னதாய்த் தீரத்தெளிய ஆராய்ந்துபார்த்தே பிறகு அதைச் செய்ய எத்தனிக்கவேண்டும். அவ்விடத்துக்கு அநேகம் வாலிபர்கள் வெகு செல்வத்தோடு சென்று பிறகு பிச்சைக்காரர்களாய் அங்கிருந்து திரும்பிவந்திருக்கிருர்கள்; அதன்மேல் தங்கள் சித்தமையா என்ருன். அதைக் கேட்டு அந்த வாலிபன், எவனே ஒருவன் ஏமாந்துபோன காரியத்துக்காக இப்போது நீ ஏன் விசாரப்படுகிருய். நான் சொன்னதைச் செய்யவேண்டுவதுதானே உன் கடமை; அவ்விடத்துக்கே கப்பலைத் திருப்பி ஓட்டவேண்டும் என்று நிர்ப்பந்திக்க, வேறுவிதியில்லாமல் கப்பலோட்டி அப்படியே செய்தான். கூடவந்த கப்பற்காரர்களுக்குத் தெரியாமலே இந்தக் கப்பல் மெல்லத் திரும்பி அந்தக் கொடிய தீவண்டைபோய்ச் சேர்ந்தது. காலையில் உதயமானவுடனே, மிகச் சிறந்த கப்பலொன்று அளவற்ற சாமான்களோடுவந்து துறைமுகத்தில் இறங்கியிருக்கிறதென்ற செய்தி அந்தத் தீவு முழுதும் பரவ, அங்குள்ள ஜனங்களெல்லாம் அதன் அதிசயத்தைப் பார்க்கக் கூட்டம்கூட்டமாய் ஓடிவந்தார்கள். பிறகு அந்தத் தீவுக்குத் தலைவியான பெண்ணரசியும் அச்செய்தி கேள்விப்பட்டுத் தன்னை வந்து காணும்படி ஜகந்நாதனுக்குச் செய்திசொல்லியனுப்ப, அவனும் அதிக மரியாதையோடு அவளைக் காணப்போனுன். அவனைப் பார்த்தவுடனே அந்தச் சீமாட்டி எழுந்துவந்து அவன் கையைப் பிடித்துக்கொண்டு, ஐயா நீர் யார், எங்கிருந்து வருகிறீர்; இவ்விடத்து வழக்கம் உமக்குத் தெரியுமா என்று கேட்க, அவன், நன்ருய்த் தெரியும்; அதற்காகவே நான் இங்கு வந்தேன் என்ருன். அதைக் கேட்டு அந்தப் பெண்ணரசி அதிக சந்தோஷமடைந்து அவனை மிகவும் கொண்டாடினுள். அவ்விடத்து மந்திரி முதலியவர்களும் அவனுடைய சவுந்தரியத்தையும் சாமர்த்தியத்தையும் சமத்காரமாய்ப் பேசும்திறமையும் பெருந்தன்மையையும் பார்த்து மிகவும் ஆநந்தமடைந்து அன்றெல்லாம் அவனேடுகூடவே பொழுதுபோக்கினுர்கள். அன்று பகற்பொழுதெல்லாம் விருந்தும் பாட்டும் கூத்துமாய் வெகு விநோதமாகக் கழிக்கப்பட்டது. இந்த உத்தம புருஷனே நமக்கு அரசனுகவாய்த்தால் மிக்கநலமாயிருக்கும் என்று அந்தத் தீவார் அனைவரும் அதிக ஆவலோடு எதிர்பார்த்திருந்தார்கள்.

இப்படி எல்லோரும் விநோதமாயிருக்கையில் இராப்பொழுதாயிற்று; அப்போது அத்தீவின் சீமாட்டி ஜகந்நாதனைக் கைபிடித்து அழைத்துக்கொண்டு படுக்கையறைக்குப் போய், ஸ்வாமி, நெடுநேரமாயிற்றே; உங்களுக்கு மிக்க இளைப்பாய் இருக்குமல்லவா? சற்றே படுத்து இளைப்பாற விருப்பமானால் இங்கு இளைப்பாறலாம் என்று சொல்ல, அவன் அப்படியே ஆகட்டும் என்றான். உடனே இரண்டு பெண்கள் அவனுக்குப் புசிக்க இனிய பண்டங்களும் பானவகைகளும் கொண்டுவந்தார்கள். அதுகண்டு அவ்வரசி, ஐயா தாகமாயிருந்தால் இவற்றைக் கொஞ்சம் ஏற்றுக்கொள்ளலாம் என்று சொல்ல, அவன் அப்படியே அந்தப் பணியாரங்களையும் கொஞ்சம் தின்று, பானவகையெல்லாம் அதிக மதுரமாய்த் தோன்றியதனால் அவை எல்லாவற்றையும் குடித்துவிட்டான். அது அந்தக்ஷணமே அவனை மயக்கிவிட்டது; அவனுக்குப் படுக்கையில் படுத்துக்கொண்டதுதான் தெரியும்; பின்பு தேகஸ்மரணையேயில்லை. மறுநாள் உதயமாகி நான்குநாழிகைவரையிலும் கண்விழியாமல் அப்படியேதான் படுத்துக்கொண்டிருந்தான்.

(இன்னும் வரும்.)

வித்தியார்த்திகளை நோக்கிச் சொன்ன நற்புத்தி.

கல்கத்தா சர்வகலாசாலையில் லார்ட்டு ரிப்பன் பிரபு வித்தியார்த்திகளைக்குறித்துச் சொன்ன விஷயங்களுள் முக்கியமான சிலவற்றை இதனடியில் எழுதுகிறோம்.

வித்தியாப்பியாசத்தின் பிரயோஜனமாவது வித்தியார்த்தியினுடைய மனதில் உபயோகமின்றிப் பலவிஷயங்களை நிரப்புவதன்று; பற்பல சாஸ்திரவிஷயங்களை வழுவலாகப் பேச வித்தியார்த்திக்கு வல்லமையுண்டாக்குவதன்று; சர்வகலாசாலையைச் சேர்ந்த பரீக்ஷைகளெல்லாவற்றிலும் தேறும்படி செய்வதுமன்று; பின்னென்னவெனில், அவ்வித்தியார்த்திக்கு இயற்கையாயமைந்த புத்திசக்திகளைக் கல்விப்பயிற்சியினால் விகாஸப்படுத்தி நன்றாய்த் திடப்படுத்துவதாம். ஆதலின் வித்தியாப்பியாசத்துக்கு வேண்டிய முதற்பொருள் திருத்தமான ஞானமாம். மேலெழுந்தவாரியாய்ப் பலவிஷயங்களைக் கற்பதைப்பார்க்கிலும் சிலவிஷயங்களையாகிலும் திருத்தமாய்க் கற்பதனால் புத்தி நன்றாய்ப் பண்படுத்தப்படும். ஆயினும் இக்காலத்தில் விஷயங்களை ஆழ்ந்தறிவதைவிட்டு மேலெழுந்தவாரியாகவே கற்கத் தூண்டுவதற்குப் பல ஏதுக்கள் இருக்கின்றன. நாம் படிக்கும்படி இப்போது ஏற்பட்டிருக்கின்ற விஷயங்களும், சென்ற நாற்பது ஐம்பது வருஷகாலமாய்ப் புதிதாகப்

பிரசுரமான பல சாஸ்திரவிஷயங்களும், கல்விப்பயிற்சியென்னும் சிங்காரவனத்திலே செழிப்பாகப் பூத்திருக்கின்ற புஷ்பங்களை ஒவ்வொன்றாய் எல்லாவற்றையும் பறித்துக்கொள்ளவேண்டுமென்று வாலிபர்களுக்கு இயற்கையாகவே உண்டாகிய ஆவலும், கடைசியாய், பலவிதமாக ஏற்பட்டிருக்கும் பரீக்ஷைகள் விஷயத்தில் விலக்கவொண்ணாத நோக்கமும் ஆகிய இவையெல்லாம் வாலிபர்களை ஒரேமுகமாகவே இழுத்துக்கொண்டுபோகின்றன. ஒருவனுடைய திறமையை, அவன் சாதாரணமான விடங்களில் மிகுதியாய்ப் பேசுகிற பலவிஷயங்கள், அவன் படித்த புத்தகங்களின் தொகை, புத்தியில் கிரகித்துக்கொண்டிருக்கிற விஷயங்கள், இவைகளைப் பார்த்தே நாம் நிதானிக்கமுடியாது; அவன் விஷயங்களை உறுதியாய் அறிந்து தன் சுவாதீனமாக்கிக்கொண்டிருப்பதும், புத்தகங்களைப் படித்து ஜரிப்பித்துக்கொண்டிருப்பதும், விஷயங்களைப் பகுத்தறியும் திறமைபெற்றிருப்பதும், ஆலோசிக்கும் திறமையும், புத்தியின் வலிமையும் உடையவனாயிருப்பதுமாகிய இவைகளை ஆய்ந்தோய்ந்துபார்த்தே நிதானிக்கவேண்டும். இவ்வண்ணமாக நிதானிப்போமாயின், ஒருவனுக்கு நன்றாய்ப் புத்திப்பயிற்சி உண்டாவது, பல சாஸ்திரவிஷயங்களை மேற்புல் மேய்வதுபோலத் தெரிந்துகொள்வதனாலன்று; ஒரு விஷயத்தையாயினும் திருந்தக் கற்றறிந்துகொள்வதனாலேயேயென நமக்கு நன்றாய்த் தெளிவாகும். ஆதலின் ஒவ்வொரு வித்தியார்த்திக்கும் நான் சொல்லத்தக்கதாவது, எதிலும் திருத்தமாயிருக்கவேண்டும்; தங்களுக்குத் தெரிந்த விஷயங்களைக் கூடியவரையில் ஐயந்திரிபற ஆழ்ந்து கற்றுக்கொள்ளவேண்டும்; கல்விகற்பதற்கு யோக்கியவயதான இளமைப்பருவத்தைப் புத்தியை நன்றாய்ப் பண்படுத்தி விகாஸப்படுத்துவதிலேயே செலுத்தவேண்டும்; அக்காலத்தில் வீணே பல விஷயங்களையும் படித்து மனதைக் கவலைப்படுத்தவேண்டாம். நல்ல திறமை உண்டானபிறகு அவ்விஷயங்களை எளிதில் அறிந்துகொள்ளக்கூடுமல்லவா? ஆதலால் பிற்காலத்தில் பலவிஷயங்களையும் படிப்பதற்கு ஏற்ற கருவியான புத்தியை இளமைப்பருவத்தில் பண்படுத்திக்கொள்வதே வித்தியார்த்திகளுடைய கடமையாம்.

மேலும், நீங்கள் கற்கிறவிஷயங்களை ஆழ்ந்து திருத்தமாகக் கற்றுக்கொண்டிருக்கையிலும், உங்களுடைய அறியாமையையும் அடிக்கடி நினைத்துக்கொள்ளவேண்டும். "கற்றதனுவளவு கல்லாதுலகளவு" என்கிறபடி, நமக்கு இன்னும் தெரியாதவிஷயங்கள் உலகத்தில் எவ்வளவோயிருக்கின்றன என்பதை அடிக்கடி நினைத்துக் கொள்வதைப் பார்க்கிலும் வித்தியார்த்திகளுக்குச் சிறந்த தூண்டுகோல் வேறில்லை. இவற்றை நினைக்க நினைக்க ஒருவன் கற்கிற விஷயமெல்லாம் அவன் மனதில் உறுதியாய்ப் படியும். இவ்வளவிருந்தும் கடைசியாகக் கவனிக்கவேண்டுவது ஒன்று உண்டு; இவ்வளவு கஷ்

டப்பட்டுக் கல்விகற்றும் அதை நாம் எப்படி உபயோகிக்கிறேமோ அதற்குத் தக்கப்படிதான் அது உலகத்துக்குப் பயன்படும். அவரவருடைய நன்மைகளுக்கும் ஈனமான காரியங்களுக்கும் மாத்திரமே நாம் அதை உபயோகிப்போமானுல், அப்போது அவ்வறிவு இருப்பதைப்பார்க்கிலும் இல்லாமையே வாசியென்னலாம். மன்னுயிர்களுக்குச் சர்வசாதாரணமாய்ப் புத்தி சக்திகளையும் உரிமைகளையும் அளித்திருப்பது அவற்றைத் தங்களுக்காகவே விருத்திபண்ணித் தங்களுடைய நன்மைக்காகவே உபயோகப்படுத்தவேண்டுமென்பதற்காகவன்று; அவற்றை நன்ருய் விருத்திபண்ணி, அவற்றை நமக்குத் தந்தருளினவனுடைய பெருமைகளை மேன்மேலும் விளங்கச்செய்து உலகத்துக்கு விசேஷமாக நன்மைவிளைவிக்கவேண்டுமென்பதற்காகவேயாம்.

கப்பல்தச்சனுன கோமகன்.

பூர்வகாலத்தரசர்களுள் அநேகர் யந்திரசாஸ்திர சம்பந்தமான கைத்தொழில்களைத் தமக்கு ஒரு விநோதவிளையாட்டாகச் செய்துகொண்டிருந்தனர். அதாவது, தமது நாட்டுக்குடிகளுக்கு ஜீவனேபாயமாகிய உழைப்பு ஆராய்ச்சி முதலியவைகளை அவர்கள் தமக்கு ஒரு பொழுதுபோக்காகக் கையாடிவந்தார்கள். பிராஞ்சுதேசத்தரசர்களுள் அதிர்ஷ்டவீனனுய் அரசாட்சிமாறுகையில் தலையறுப்புண்டுபோன பதினுருவது லூயிஸ் என்னும் அரசன் பூட்டுவேலைசெய்யும் கருமானுய் இருந்தான். ப்ராடஸ்டன்டுமதம் எழும்பவொட்டாமல் ஐரோப்பியர் அனைவரையும் போப்பு என்னும் மதாசாரியனுடைய கொடுங்கோன்மைக்கே ஆளாயிருக்கும்படி செய்யும் பொருட்டு வீணே நெடுங்காலம் முயன்றவனுன ஐந்தாவது சார்லெஸ் என்னும் ஸ்பானியா தேசத்தரசன் பெரிதும் சிறிதுமான கடிகாயந்திரங்கள் செய்வதே தனக்கு ஒரு விஞேதமாகக்கொண்டிருந்தான். ஆயினும் மரணத்திற்குச் சிலதினங்கள் முன்னே, தன்னுடைய கடிகாயந்திரங்களுள் இரண்டைக்கூட ஒன்றுக்கு ஒன்று ஒரே அளவாகப் போகும்படி எவ்விதத்திலும் செய்யக்கூடாமலிருப்பதைக் கண்டு, இரண்டு கடிகாயந்திரங்களைக்கூட ஒரேயளவாக நடத்துவது நமக்கு அசாத்தியமாயிருக்க, உலகத்தார் அனைவரையும் ஒரே விதமான அபிப்பிராயம் கொண்டிருக்கும்படி நிர்ப்பந்திக்க நாம் முயன்றேமே! இதென்ன பேதைமையென்று சொல்லி அவன் தானே மனமழிந்தான். மற்றொரு ஸ்பானியாதேசத்து அரசன் சித்திரத்தையல் வேலையில் மிகுந்த சாமர்த்தியமுள்ளவனுகிப் பல ஆடைகளுக்குச் சித்திரத்தையல் தைத்துக்கொடுப்பதிலேயே பொழுதுபோக்கிவந்தான்.

இப்படிப்பட்ட பல அரசர்களுள் மிகப் பிரயாசப்பட்டு உழைத்து ஒரு கைத்தொழில் செய்தவன் ருஷியாதேசத்தரசனான மகா பீட்டர் என்பவன் ஒருவனே. அப்படி அவன் தொழில்செய்தது தன்னுடைய கேவலவிநோதத்திற்காகவன்று; தன் குடிகளுக்கு நிதர்சனமாய் வழிகாட்டுவதற்காகவே. அவனுடைய காலம்வரையில் ருஷியாதேசத்தார் சிறிதும் நாகரிகமற்ற நிலையிலேயே இருந்தார்கள்; உபயோகமான கைத்தொழில் ஒன்றும் அதுவரை அவர்களுக்குத் தெரியவே தெரியாது; அங்கே படிப்பென்பதைக் காதினால் கேட்டவர்கள்கூட இல்லை; ஐரோப்பாவிலுள்ள மற்ற ஜாதியார்க்கும் இந்த ருஷியாதேசத்துக் குடிகளுக்கும் எவ்விதமான போக்குவரவும் இல்லாதிருந்தது. இந்த ஸ்திதியைக் கண்டு மகா பீட்டர் என்னும் பிரபு ருஷியாவை மிகச் சீர்திருந்திய மகா ராஜ்யமாகச் செய்விக்கவேண்டுமென்று நிச்சயித்து, அவற்றுள் முக்கியமாய்க் கடலின் துணையினால் அத்தேசத்தைப் பிரபலப்படுத்தவேண்டுமெனத் தீர்மானித்தான். ஆயினும் அத்தேசத்தில் கப்பல், கப்பல்துறை, கப்பல் கட்டும் இடம், கப்பலோட்டிகள், கப்பல்கட்டுகிற தச்சர் முதலியவர்களுள் ஒன்றுகூடக் கிடையாததலால் கடலின் துணையால் அத்தேசத்தைப் பிரபலப்படுத்துவது அசாத்தியமென்று அநேகர் எண்ணினார்கள். மேலும், ருஷியாதேசத்துக்கு வடபுறத்தில் ஸ்வீடன் தேசமும், அதற்குத் தென்புறத்தில் துருக்கிதேசமும் இருப்பதால் கடலுக்கும் ருஷியாவுக்கும் நெடுந்தூரம் இருக்கின்றது. அதனால் பீட்டருக்குக் கப்பலிருந்தாலும் அதை தரைக்குள் ஓட்டிக்கொண்டு போம்படி இருந்தாலல்லது அவன் அதைக் கையாள்வதற்கில்லை. இதன்றியில் அத்தேசத்துக் குடிகளுக்குக் கடலென்றால் அதிக வெறுப்பாயிருந்தது. அவர்கள் எல்லாரும் தரையிலேயே சஞ்சரிக்கிற வழக்கமுடையவர்கள். தீராப்பொறியாக நேரிட்டாலல்லது அத்தேசத்தாருள் ஒருவரும் கடலிற் கப்பலேறிப்போகிறவரல்லர். ஆயினும், பீட்டர் அசாத்தியமென்கிற வார்த்தையைக்கூட ஏற்றுக்கொள்ளுகிறவனன்று; ஒன்றைச் செய்யவேண்டுமென்று முதலில் தீர்மானிப்பானானால் எவ்வளவு வருத்தமிருந்தாலும் அதை அவன் செய்துமுடிக்காமல் விடுவதில்லை. அவன் பகைவர்களோடு பலதடவை போர்செய்து அத்தனைதரமும் மிகக் கொடிய தோல்வியை அடைந்தானாயினும், அதனால் சிறிதளவாயினும் ஊக்கமழியாமல் கடைசியாக மலைந்து சிறந்த வெற்றிபெற்றுத் துருக்கரிடத்திலிருந்து கப்பல்துறைகளும் கப்பல்ரக்ஷணஸ்தானங்களும் அமைந்த விசாலமான கடற்கரையைக் கைப்பற்றினான். ஸ்வீடன் தேசத்தாரிடத்தினின்றும் ஒரு நாட்டைக் கைக்கொண்டு பிற்பாடு அங்கே ஸெண்டு பீட்டர்ஸ்பர்க்கு முதலான நகரங்களைக் கட்டினான்.

இது அவன் செய்த காரியங்களுள் ஓர் ஏகதேசமேயொழிய அதிகமல்ல; இன்னும் அவன் கப்பல்களையும் கப்பலோட்டிகளை

யும் சேர்ப்பதிலேயே கண்ணுயிருந்தான். ஒன்றை நிதர்சனமாக நடத்திக்காட்டுவதினுல் உண்டாகும் நன்மை இப்படிப்பட்டதென் அவனுக்கு நன்ருய்த் தெரியுமாதலால், குடிகளையெல்லாம் தன் கட்டளைப்படியே நடத்தும்படியான சர்வாதிகாரமுள்ள சுவதந்திர ராஜாவாயிருந்தும், அவன் குடிகளைத் தன் அதிகாரத்தைக் கொண்டு கையாளாமல், முதலில் தானே நிதர்சனமாக நின்று வழிகாட்டி அதன்படியே குடிகள் தாமே நடந்துகொள்ளும்படி செய்ய வேண்டுமெனத் தீர்மானித்தான். ஆதியில் அவனுக்கே கடலினிடத்தில் அதிக அச்சமுண்டாயிருந்தது. ஒரு ஆற்றைக் கடந்துபோனுல் உடம்பெல்லாம் அதிக இசிவு உண்டாகுமென்று இளமைப்பருவத்தில் அவனுக்கு உண்டாகிய அச்சம், ஒருவேளை முழுகிப்போம்படியும் நேரிடுமென்ற துர்ப்போதனையினுல் மிகவும் அதிகமாகியிருந்தது. ஆனுலும் அவன் பிறகு தன்னுடைய மனவுறுதியால் அந்த அச்சத்தைப் பற்றற நீக்கி, ஆற்றிலிறங்கி நீர்விளையாடல்செய்வதே தன்னுடைய முக்கியமான விளையாட்டுகளுள் ஒன்ருயிருக்கும்படி செய்துகொண்டான். பிற்காலத்தில் பால்திக்கு கடலிலே சிறுபடவு ஓட்டிக்கொண்டு விளையாடுவதே அவனுக்குப் பெரிய பொழுது போக்காயிருந்தது. தன்னுடைய சுவாதீனத்தில் கப்பல்களில்லாமல் கடலோரத்தில் தனக்கு அவ்வளவு அதிகமான பூமியிருப்பது சிறிதும் உபயோகமற்றதெனத் தெரிந்து, அவன் தானே கப்பல்கள் கட்ட ஆரம்பித்தான்.

பீட்டர் தானே சகாயமாயிருந்து செய்வித்த ஒரு சிறுபடவை ஸெண்டு பீட்டர்ஸ்பர்க்கில் நாளைக்கும் காட்டுகிருர்கள். அங்குள்ள கப்பல்களுக்கெல்லாம் தாய்க்கப்பலென்று சொல்லப்படும் அது முப்பதுஅடி நீளமும் எட்டடி அகலமும் உடைத்தாகி, மூன்று பாய்கள் விரிக்கத்தக்க ஒரு படவாயிருக்கின்றது. அது நீவா என்னும் நதியின் முகத்துவாரத்தண்டை ஒரு கோட்டையில் வைக்கப்பட்டிருக்கிறது. அதை வெளியெடுக்கும்போதெல்லாம் ராஜாவுக்கு நடத்தும் மரியாதைகள் யாவும் அதற்கு நடத்தப்படுகின்றன; பல கப்பல்களிலுமுள்ள பீரங்கிகளினின்றும் வெடிதீர்க்கப்படுகின்றது. ஆரம்பத்தில் அப்படி மிகவும் சொற்பமாயிருந்துதான் இப்போது ருஷியாதேசத்துக் கப்பற்கூட்டம் ஆயிரக்கணக்காக விருத்தியடைந்திருக்கின்றது. அக்காலத்தில் பீட்டர் தன் கையாலே சொந்தமாய்க் கட்டிய கப்பல் இப்போது ஒன்றுகூட இல்லைதான். அவன் தானே சுயமாய் அறுத்துச் சீர்ப்படுத்திய மரம் பலகை முதலிய யாவும் அநேகமாய் அழிந்துபோயின; அவன் அடித்த ஆணிகள் வெகுவாய்த் தேய்ந்துபோயின. ஆயினும் அப்படிப்பட்ட புராதனமான படவுக்கு ருஷியாதேசத்தார் மரியாதைசெய்துவருவது பார்ப்பவர்க்கு ஒரு விநோதமாகவே இருக்கின்றது.

உழைப்பதில் எப்படியோ அப்படியே பீட்டர் படிப்பதிலும்

ஆஸ்தையுடையவனுயிருந்தான். அதனுல் ருஷியாவில் கல்விகற்பிப்பவர் ஒருவரும் இல்லாமற்போனதுகண்டு பீட்டர் கல்விகற்கும்பொருட்டு அன்னியதேசத்துக்குப் போனுன். எப்படியெனில், உபயோகமான கல்வி கைத்தொழில்களைச் செம்மையாய்க் கற்றுக்கொண்டுவரும்படி ருஷியாதேசத்து வாலிபர்கள் அநேகரை முதலில் பிறதேசங்களுக்கு அனுப்பிவிட்டுப் பிறகு தானும் உலாந்தாதேசத்துக்குப் போகப் புறப்பட்டான். இது நடந்தது 1697-ஆுத்தில். அப்பொழுது பீட்டருக்கு வயது இருபத்தைந்து. இவன் ஸார்டம் பட்டணம்போய்ச் சேர்ந்து உலாந்தக்காரருடைய கப்பலோட்டிகளின் உடையுடுத்து, அங்கிருந்த காப்பு என்னும் கப்பல்கட்டுவோனிடத்தில் ஒரு சாதாரண தச்சுவேலைக்காரனுய் அமர்ந்தான். இங்கே அந்த மகாராஜன் கப்பல்கட்டுமிடத்துக்கருகே ஒரு சாதாரணமான வேலைக்காரனுடைய குடிசையில் குடியிருந்து வேலைசெய்து, தனக்குக் கிடைக்கும் கூலியைக்கொண்டு ஜீவனம்பண்ணிவந்தான். இக்காலத்தில் அவன்தானே சுயமாய் மற்றத் தச்சர்முதலான வேலைக்காரர்களைப்போலத் தன் கையாலேயே சோறுசமைத்துக்கொள்வதும், அற்பமான படுக்கையில் படுப்பதுமாயிருந்தானேயொழிய, தன்னுடைய கவுரவங்களைச் சிறிதும் பாராட்டவில்லை. அவனுடைய ஸ்தானுதிபதி முதலியவர்கள்மாத்திரம் தங்கள் தங்கள் அந்தஸ்துக்கேற்ற பெருமையையே அனுபவித்துவந்தார்கள்.

ஆனுல், பீட்டருக்கும் அவனேடுகூட வேலைசெய்த மற்றத் தச்சர்களுக்கும் ஒருவிஷயத்தில் மாத்திரம் வேற்றுமையிருந்தது. மற்றவர்களுக்கெல்லாம் அன்றுடம் தங்களுக்குக் குறித்த வேலை தவிர வேறு வேலைகிடையாது. இவனே அப்படியன்றித் தான் செய்துவரும் வேலையோடுகூடத் தன்னுடைய மகாராஜ்யத்தின் அரசாட்சி வியாபாரங்களையும் நடத்திக்கொண்டுவந்தான். அவன் வேலைசெய்துகொண்டிருக்கும்பொழுது, சேனைகளைக் கையாள்வது, ராஜகாரியங்களை நடத்துவது முதலானவைகளைப் பற்றிச் சமாசாரங்கள் அவனுக்கு வந்துகொண்டேயிருக்கும். அவன் இங்கிருக்கும்பொழுதும் ஐரோப்பாகண்டத்திலுள்ள பல தேசத்து மந்திரிகளும் அவனை வந்து பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

இந்த மகாராஜாவினுடைய சரித்திரத்தால் உண்டாகும் நீதிகளாவன:—

வருத்தங்களைக் கண்டு ஒருபோதும் பின்வாங்கலாகாது; மனவுறுதியும் தைரியமும் இருந்தால் எவ்விதமான வருத்தங்களையும் வெல்லலாகும்.

அற்பமாயிருக்கிறதென்று கண்டு ஆரம்பத்தில் எதையும் இகழலாகாது; வகைதெரிந்து நடத்தினுல் பிறகு அதுவே மிகப் பெருமை உண்டாக்கும்.

படிப்பதற்கு ஒருபோதும் வெட்கப்படலாகாது; நமக்குப் படிப்பேனென்று அகங்காரங்கொண்டிருப்பவன் வாழ்நாள் முழுதும் மூடனுகத்தான் கிடக்கவேண்டும்.

கவுரவமான வேலைகளை ஒருபோதும் இகழக்கூடாது. மகா பீட்டர் தான் யுத்தம்பண்ணி ஜயம் அடைந்ததனுலே அவ்வளவு பெருமைபெறவில்லை; கப்பல்தொழிலாளியாக வேலைசெய்ததினுலேதான் அதிகமாகப் பெருமைபெற்ருன்.

சிறுவர்க்கான கதை.

வல்லமைபெற்ற வில்லாளி.

முன் ஒருகாலத்திலே ஒரு சிறுபையல் இருந்தான். அவன் சிலகாலம் கருமாரவேலையில் கைபழகிப் பின்பு ஒருநாள் தன் தகப்பனைப் பார்த்து, ஐயா, இவ்வூரிலேயே உட்காந்திருப்பதைவிடத் தேசாந்தரம்போய்ப் பொருள்சம்பாதிக்கவேண்டுமென்று அபேக்ஷைகொள்கிறேன் என்ருன். அதைக்கேட்டுத் தகப்பன் சந்தோஷப்பட்டு, குழந்தாய் உன்னுடைய தைரியத்தையும் திறமையையும் பார்க்க எனக்கு அதிக சந்தோஷமாகின்றது; உன் இஷ்டப்படியே சுகமாய்ப் போய்ப் பொருள்தேடிக்கொண்டு வா என்று சொல்லி, வழிச்செலவுக்கு வேண்டிய பொருள்கொடுத்து அனுப்பினுன். அந்தச் சிறுபையலும் தகப்பனிடத்தில் செலவுபெற்றுக்கொண்டு ஊரைவிட்டுப் புறப்பட்டு வழியில் அங்கங்கே அகப்பட்ட வேலைகளைச் செய்துகொண்டு விநோதமாகவே சிறிதுதூரம் போனுன். ஆயினும் சிலநாளைக்குப்பிறகு அவன் தன்னுடைய கருமாரவேலையில் மிகவும் வெறுப்புற்று வில்வித்தை கற்கவேண்டுமென்று விருப்பம்கொண்டான். அதற்காகத் தகுந்த உபாத்தியாயனைத் தேடிக்கொண்டுபோகையில், வழியிலே மிக்க வல்லவனுன வில்லாளி ஒருவன் இவனைக் கண்டு, பிள்ளாய் நீ எவ்விடம், எங்கே போகிருய் என்று கேட்க, அந்தச் சிறுவன், ஐயா நான் ஒரு கருமான்; ஆயினும் எனக்கு அந்தக் கருமாரவேலை ருசிக்காமல் வில்வித்தை கற்கவேண்டுமென்று போகிறேன்; தாங்கள் எனக்கு வில்வித்தை கற்பித்துக்கொடுப்பீர்களா என்ருன். அதற்கு அவன், அப்படியே ஆகட்டும்; என்னுடன்கூட வருவாயானுல் உன் இஷ்டப்படியே வில்வித்தை கற்றுக்கொடுக்கிறேன் என்று சொல்ல, அதற்கு உடன்பட்டு அச்சிறுவன் அவனைப் பின்தொடர்ந்துசென்று, வில்வித்தை கற்றுக்கொண்டு அவனிடத்திலேயே சில வருஷங்கள் இருந்தான். வில்வித்தையில் நன்ருய்த் தேர்ந்தபிறகு ஒருநாள்

அந்த வாலிபன் தன் ஆசிரியனைப் பார்த்துத் தன் ஊருக்குப் போகத் தனக்கு விடைகொடுக்கும்படி கேட்க, அவன் அந்தச் சீஷனுக்கு ஒருபோதும் இலக்குக்குத் தப்பாத மிகச் சிறந்த ஒரு அம்பும் வில் லும் கொடுத்து ஆசீர்வசித்துப் போக விடைதந்தான். அவற்றைப் பெற்றுக்கொண்டு போகையில் ஒருநாள் அவன் மிகப் பெரிய காட்டிற்போய்ச் சேர்ந்தான். அன்று பகற்பொழுதெல்லாம் நடந் தும் அந்தக் காடு முடியவில்லை. அதனால் அவன் பொழுதுபோய்க் கண்ணுக்கு நன்றாய் இருண்டுபோனபிறகு அப்புறம் போகக்கூடா மல் அங்கிருந்த ஒரு பெரிய விருக்ஷத்தின்மேல் ஏறிக்கொண்டு அந்த இராப்பொழுதை அங்கேயே போக்குகிறதென்று தீர்மானித்திருந் தான். இப்படியிருக்க அர்த்தராத்திரிவேளையில் ஒருபுறத்திலே சிறிதுதூரத்துக்கப்பால் விளக்கொளி ஒன்று தோன்றிற்று. அது கண்டு அவன் இது யாரோ மனிதர் வசிக்கின்ற இடம்; அங்கே போனால் ராத்திரி சுகமாய்ப் படுத்திருந்து காலையில் அப்புறம் போகலாம் என நிச்சயித்து அம்மரத்தைவிட்டுக் கீழிறங்கி அந்த விளக்கொளி தெரிந்த திக்கைநோக்கிச் சென்றான். போகப்போக அந்த வெளிச்சம் அதிக பிரகாசமாகத் தோன்றியது. அதற்குச் சமீபத்திலே போய்ப் பார்க்கையில் அது விளக்குவெளிச்சமல்ல வென்றும், நடுக்காட்டிலே யாரோ கொளுத்துகிற பெருந்தீயென் றும் தெரியவந்தது. அந்தத் தீயைச் சுற்றி மூன்று அரக்கர்கள் உட்காந்து ஒரு பெரிய ஆட்டுக்கிடாவை அந்தத் தீயிலே சமைத் துக்கொண்டிருந்தார்கள். அப்போது அவர்களுள் ஒருவன், இந்த மாமிசத்தில் நான் கொஞ்சம் எடுத்துத் தின்று இது சமைந்தது போது மா என்று பார்க்கிறேன் என்று சொல்லி அந்த மாமிசத்தில் சிறித ளவு அறுத்தெடுத்து அதை வாயிலே போட்டுக்கொள்ளப்போனான். அதைச் சற்று தூரத்திலிருந்து பார்த்திருந்த வில்லாளி அவ்வரக் கன்கையிலிருந்த மாமிசத்துண்டு நெடுந்தூரத்துக்கப்பால் போய் விழும்படி அதைத் தன் வில்லால் அடித்துத் தள்ளினான். அது கண்டு அரக்கன் ஓகோ, கையிலிருந்த மாமிசத்தைக் காற்றடித்துக் கொண்டு போய்விட்டதே என்று சொல்லி, மற்றொரு துண்டு அறுத் தெடுத்துத்தின்னப்பார்த்தான். அதையும் அந்த வில்லாளி முன்போ லவே அடித்துத் தள்ளிவிட்டான். அந்தத் துண்டும் போய்விட்டது கண்டு அவன் தன் பக்கத்திலிருந்த மற்றொரு அரக்கனைப் பார்த்து அதிக கோபத்தோடு அவன் முதுகில் ஓரறை அறைந்து, நான் கையில் வைத்திருந்ததை நீ ஏன் பிடுங்கிக்கொண்டாய் என்றான். அதற்கு அவன் நீ மாமிசத்துண்டு வைத்திருந்ததை நான் பார்க்க வேயில்லையேயென்று சொல்ல, அவன் மறுபடி மற்றொரு துண்டு நறுக்கித் தின்னப்பார்த்தான். அதுவும் அவன் வாய்க்கு எட்ட வில்லை; அதையும் அந்த வில்லாளி தன் அம்பினால் அப்புறம் தள்ளி விட்டான். அதைப் பார்த்திருந்த ராக்ஷதர்களெல்லாம், ஓகோ,

யாரோ ஒரு வில்லாளி இதை அடித்துத் தள்ளுகிறான். கைக்கு எட்டிய உணவை வாய்க்கெட்டவொட்டாமல் விலக்குகிறவன் எவ்வளவு வல்லவனாயிருக்கவேண்டும்! அப்படிப்பட்டவன் ஒருவன் இருந்தால் நமக்கு அவனால் மிக்க உதவி உண்டு என்று சொல்லி, ஓ, குறிதப்பாமல் கூர்மையாய் அம்பு எய்கின்றவரே, எங்கே ஒளித்திருக்கிறீர்? ஒளித்திருந்து அம்பு எய்வது ஆண்மைத்தனமாகுமா? வெளியே வாரும்; நாங்கள் உமக்கு ஒரு தீங்கும் செய்வதில்லை. எங்களுடன் உட்காந்து வயிறூரப் புசித்துக் களிப்புற்றிரும். வெளிவராமல் ஒளித்திருப்பீரானால் நாங்கள் எப்படியாவது தேடிப்பிடித்து உம்மைக் கொன்றுவிடுவோம் என்று உரத்தகுரலாய்க் கூவினார்கள்.

அந்தக் கூச்சலைக் கேட்டவுடனே வில்லாளி தைரியமாய் வெளிப்பட்டு அவர்கள் எதிரிலே போய்நின்றான். அவனைப் பார்த்து அரக்கர்கள் நீ யாரென்று கேட்க, அவன், நான் ஒரு வல்லமைபெற்ற வில்லாளி. நான் குறிவைத்தடிப்பது ஒருபோதும் பிசகுவதில்லை என்றான். அதைக் கேட்டு அவர்கள், ஆயின் நீயும் எங்களுடன் வருவாயானால் நாமெல்லாரும் கூடி விநோதமாய்ப் போகலாம். மேலும் இக்காட்டுக்கு அப்பால் மிகப் பெரிய கடற்பிரிவு ஒன்று இருக்கிறது. அதற்கு அப்பால் ஒரு பட்டணத்திலே மிகவும் அழகான கன்னிகையொருத்தி இருக்கிறாள். அந்தக் கன்னிகையைக் கொண்டுவரவேண்டும் என்று நாங்கள் நெடுநாளாய் ஆவல்கொண்டிருந்தும் அது எங்களுக்குச் சிறிதும் சாத்தியப்படவில்லை என்று சொல்ல, வில்லாளி, இது ஒரு பெரியகாரியமா? நான் ஒரு நொடிப்பொழுதில் அவளைக் கொண்டுவருவேன் என்றான். நீ அதை அவ்வளவு சுலபமாக நினையாதே; அந்த ராஜகன்னிகை வஸிக்கின்ற மாளிகையின்வாசலிலே ஒரு நாய் காவல் காத்துக்கொண்டிருக்கின்றது. அவ்விடத்தில் புதியமனிதன் எவன் போனாலும் அது உடனே எழுந்து குரைக்கும். அதைக் கேட்டு அப்பட்டணத்தாரெல்லாரும் எழுந்து ஓடிவருவார்கள். ஆதலால் அவ்விடத்துக்குப் போவது எவர்க்கும் அசாத்தியமாயிருக்கின்றது. முதலில் அந்த நாயைக் கொன்றாலன்றி அங்கு ஒருவரும் பிரவேசிக்கக்கூடாது என்று அவர்கள் சொல்லக்கேட்டு வில்லாளி, இதற்காக விசாரப்படவேண்டாம்; நான் விளையாட்டிலேயே அந்த நாயைக் கொன்றுவிடுவேன் என்றான். உடனே அவர்கள் கப்பலேறிக்கொண்டு புறப்பட்டார்கள். அவர்கள் கடலைக்கடந்து அக்கரைபோய்ச் சேர்ந்தவுடனே அங்கிருந்த நாய் அவர்களைப் பார்த்து அதிக வேகமாய் எழுந்தோடிவந்தது. ஆயினும் அது வாய்திறந்து குரைப்பதற்குமுன்னமே அவ்விடம் சென்ற வல்லமைபெற்ற வில்லாளி ஒரு அம்பு எய்து அதைக் கொன்றுவிட்டான். அந்த நாய் இறந்துபோனதைப் பார்த்து ராக்ஷதர்கள் அதிக சந்தோஷமடைந்து அவ்விடத்து ராஜகன்னிகை தங்களுக்குக் கிடைத்ததாகவே நினைத்தார்கள். ஆயினும் வில்லாளி,

நான் முதலில் உள்ளே நுழைந்து அவ்விடத்துச் செய்தி எப்படிப் பட்டதென்று நன்றாய்த் தெரிந்துகொண்டு பிறகு உங்களை அழைத்துக்கொண்டுபோகிறேன்; நீங்கள் இங்கேயே இருங்கள் என்று சொல்லி அரக்கர்களை அங்கேயே நிறுத்திவிட்டுத் தான்மாத்திரம் அங்கிருந்த ராஜமாளிகைக்குச் சென்றான். இவன் போனபோது அம்மாளிகைக்குள் எல்லோரும் அயர்ந்து நித்திரைசெய்துகொண்டிருந்தார்கள். அதுகண்டு அவன் அம்மாளிகைக்குள்ளே நுழைந்தான். வாயிலைத் தாண்டினவுடனே ஒரு கூடத்தில் பெரிய பீடமும் அதன்மேல் முத்திரையிட்ட ஒரு கடிதமும் வைத்திருந்தன. அதற்குமேல் தங்கத்தால் சித்திரித்து அரசனுடைய பெயரும் பதிக்கப்பெற்ற வெள்ளிக்கத்தி ஒன்று தொங்கிக்கொண்டிருந்தது. அவன் அந்தக் கடிதத்தைப் பிரித்துப் படித்துப்பார்த்தான். "இந்தக் கத்தி எவன்கையிலிருக்கிறதோ அவன் இறந்தவனையும் பிழைப்பிக்கமாட்டுவான்" என்று அதில் எழுதியிருந்தது. உடனே அவன் அந்தக் கத்தியைக் கையில் எடுத்துக்கொண்டு ராஜகுமாரத்தி படுத்திருக்கும் அறைக்குப் போனான். அவளுடைய சவுந்தரியத்தைப் பார்த்தவுடனே அவன் ஒன்றும் தோன்றாமல் அப்படியே சிறிது நேரம் திகைத்துநின்று, பிறகு, ஆ! இவ்வளவு அழகுள்ள இப்பெண்மணியைக் கெட்ட எண்ணத்துடன் வந்து காத்திருக்கிற கொடிய ராக்ஷதர்கள் கையில் நான் எப்படி கொடுத்துவிடுவேன் என்று சிந்தித்துக்கொண்டே அவ்விடத்தில் நாற்புறமும் சுற்றிப்பார்த்தான். அந்தப் பெண்மணி படுத்திருந்த கட்டிலின்கீழ் இரண்டு பாதரக்ஷைகள் வைத்திருந்தன. அவற்றுள் வலதுகால் பாதரக்ஷையில் அரசனுடைய பெயரும், மற்றொன்றில் ராஜகுமாரத்தியின் பெயரும் பதிக்கப்பட்டிருந்தன. மேலும் அவ்விளவரசி பீதாம்பரமொன்று போர்த்துக்கொண்டிருந்தாள். அந்தப் பீதாம்பரத்தில் ஒரு முன்றானையில் அரசன் பெயரும் மற்றொருபுறத்தில் அவனுடைய பெண் பெயரும் அமைக்கப்பட்டிருந்தன. அவற்றைக் கண்டு அந்த வில்லாளி தன் கையிலிருந்த கத்தியால் இளவரசி போர்த்திருந்த பீதாம்பரத்தில் அரசன் பெயரோடிருந்த முன்றானையை அறுத்தெடுத்து அத்துடன் வலதுகால் பாதரக்ஷையையும் எடுத்துத் தன் கையிலிருந்த பையிலே போட்டுக் கட்டிக்கொண்டான். அங்கே படுத்து நித்திரைசெய்துகொண்டிருந்த பெண்ணரசிக்கு இந்தச் செய்திகள் ஒன்றும் தெரியாது. பிறகு அவள் அரையில் அணிந்திருந்த பட்டாடையிலும் கொஞ்சம் கிழித்துப் பையிலே போட்டுக் கட்டிக்கொண்டு சிறிதும் சந்தடிசெய்யாமல் அவன் வெளியே வந்துவிட்டான்.

வெளியே வந்து பார்த்தபோது அவ்விடத்தில் அந்த மூன்று ராக்ஷதர்களும், வில்லாளி இளவரசியை எடுத்துக்கொண்டு எப்பொழுது வெளிவரப்போகிறான் என்று அதிக ஆவலோடு காத்துக்கொண்டிருக்கக்கண்டு, அவர்களுக்குக் குறிகாட்டி உள்ளே வரும்படி அழை

த்தான். ஆயினும் அவன் வாயிற்கதவைத் திறந்து அவர்களுக்கு வழிவிடவில்லை; சுவரிலிருந்த ஒரு சிறு சாளரத்தின் வழியாகவே வரவேண்டும் என்றான். அப்படியே முதலில் ஒரு அரக்கன் அதற்குள் தலையை நுழைத்தவுடனே தன் கையிலிருந்த கத்தியால் அவன் தலையை வெட்டித் தள்ளி உடலை ஒருபுறமாய் இழுத்துப்போட்டு மற்றொரு அரக்கனைக் கூவினான். அவன் வந்து நுழையும்போது அவனுடைய தலையையும் அப்படியே வெட்டிப்போட்டான். மூன்றாவது ராக்ஷதனுடைய விதியும் அப்படியே முடிந்தது. பின்பு அவன் அம்மூன்று ராக்ஷதர்களுடைய வாயிலுமிருந்த நாக்குகளையெல்லாம் அறுத்து அவற்றையும் தன் பைக்குள்ளே போட்டுக்கொண்டு, இவ்வளவோடு இவ்விளவரசியைப் பிடித்த பீடை ஒழிந்ததென்று மிகவும் களிப்புற்றான். இக்காரியத்தை முடித்தவுடனே அவனுக்குத் தன் தந்தையைப் போய்ப் பார்க்கவேண்டுமென்ற அபேக்ஷை அதிகமாய் உண்டாயிற்று. அதனால் அவ்விடத்தில் ஒரு நிமிஷங்கூட நிற்க மனமில்லாமல், நாம் செய்த செய்கைகளையெல்லாம் நமது தந்தைக்குக் கொண்டுபோய்க் காட்டிவிட்டுப் பின்பு எங்கேயாவதுபோய்ப் பிழைப்போம். நமக்குச் செல்வம் வரவேண்டிய பாக்கியமிருந்தால், நாம் எங்கிருந்தாலும் வந்து சேருமென்று தன்னுள் நினைத்துக்கொண்டு உடனே அவ்விடம்விட்டுப் போயினான்.

(இன்னும் வரும்.)

சமாசாரம்.

உயர்ந்தவகுப்புக் கல்வி.— இவ்விந்தியாவில் துரைத்தனத்தார் உயர்ந்தவகுப்புக் கல்விச்சாலைகளை ஸ்தாபித்துத் தாமே அவற்றைப் பரிபாலித்து வருவதைப்பற்றிச் சிலகாலமாய்ச் சிற்சில ஆக்ஷேபங்கள் உண்டாயிருப்பதனால், அதை விசாரித்துத் தெளியும்பொருட்டு இப்போது துரைத்தனத்தார் சில நிபுணர்களை ஒரு சங்கமாக நியமித்திருக்கின்றனர். துரைத்தனத்தார் உயர்ந்தவகுப்புக் கல்விச்சாலைகளைப் பரிபாலிப்பது வீண்செலவென்பது சிலருடைய அபிப்பிராயம். துரைத்தனத்தாருடைய பலவிதமான வரவுசெலவுகளில் இந்தச் செலவு எவ்வளவு? இதை மிகுத்துவது உப்புக்காகுமா, கறிக்காகுமா? மயிர்சுட்டா கரியாகப்போகிறதென்பது பலருடைய அபிப்பிராயம். கல்வியிற்றேர்ந்த கோமகனான திருவநந்தபுரத்து மகாராஜா இவ்விஷயத்தில் எழுதியிருப்பதின் தாற்பரியத்தை வருகிற சஞ்சிகையில் வெளிப்படுத்துவோம்.

பொன்நாணயமும் புதிய கடன்பத்திரங்களும்.— இனிமேல் பதிப்பிக்கின்ற பொன்நாணயங்களில் நமது மகாராணியாருடைய முடியை மற்றொரு புதியமாதிரியாகப் பதிப்பிக்கப்போகிறார்கள். அம்முடி இப்போது அவர்களுக்குள்ள வயதுக்கேற்ற காட்சிஉடையதாய் ராஜகிரீடத்தோடுகூட அமைக்கப்படுமாம்.

இதுவரையில் துரைத்தனத்தார் பிறப்பித்த கடன்பத்திரங்கள் நூறுரூபாய்க்குக் குறைந்த தொகைக்கு இல்லையே. இப்போது சொற்பவரும்படியுள்ள குடிகளுக்கும் உபயோகமாகும்படி அதற்குக் குறைந்த சில்லறைத் தொகைக்கும் பிறப்பிக்கப்போகிறார்கள். அதன் விவரத்தை வருகிற சஞ்சிகையில் வெளியிடுவோம்.

C. K. S. Press, Vepery, Madras, 1882.